விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 மாசி 8 றவி ஆகிர் 25 இதழ் 8
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 20 2.82

## பாதயாத்திரை தொடர்கிறது

மதுரை, பெப். 19 தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி தலைமையிலான பாதயாத்திரை இன்று 4வது நாளாகத்திருச்செந்தூர் நோக்கிச் சென்றுகொண்டிருந்தது.

இப் பாதயாத்திரையினுல் திரு. மு. கருணாநிதியின் பாதங்களில்கொப்பளங்கள்ஏற்பட்ட போதும், அவர் சிகிச்சை செய்து தொடர்ந்தும் பாதயாத்திரையை மேற்கொண்டுள்ளார்

பாதயாத்திரையின் போது சுகவீனமுற்ற ஆற்காடு வீரசாமி சிகிச்சைக்காக மருத்துவ மனையொன்றில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

சுகவீனமுற்ற நிலையிலும் திரு. வீரசாமி பாதயாத்திரை மேற்கொள்ள கருணாநிதியிடம் விருப்பம் தெரிவித்தபோதிலும், அவரை பூரணஓய்வு எடுக்குமாறு திரு. கருணாநிதி கேட்டுள்ளார்.

தி. மு. க. வினரின் இப்பாதயாத்திரை முடிவடைய இன்னும் நான்கு நாட்கள்எடுக்கும் என்று தெரியவருகிறது.

தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதிக்கு இப்பாதயாத்திரையின்போது தக்கபொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக தமிழ்நாடு நிதியமைச்சர் திரு. ஆர் நெடுஞ்செழியன் சட்டப்பேரவையில் தெரிவித்துள்ளார்.

# ரூ. 4லட்சம் துணிகரக்கொள்ளை!

# 3 முகமூடி இளைஞர் 'கைவரிசை'

## கற்கோவளத்தில் சம்பவம்

(நமது புலோலி நிருபர் ஏ. என். எஸ். திருச்செல்வம்)

**முகமூடி அணிந்த மூன்று துப்பாக்கி இளைஞர்கள், டாக்டர் ஒருவரின் வீட்டில், நான்கு லட்சம் ரூபா பெறுமதியான நகைகளையும், இரண்டாயிரம் ரூபா ரொக்கப்பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்!**

**இப்பரபரப்பூட்டும் துணிகரச் சம்பவம் நேற்றுமுன்தினமிரவு பருத்தித்துறைத் தொகுதியிலுள்ள கற்கோவளம் என்னுமிடத்தில் நடைபெற்றுள்ளது!**

இது சம்பந்தமாக பருத்தித்துறைப் பொலிசாருக்கு அளிக்கப்பட்ட முறைப்பாட்டிலிருந்து விபரம் வருமாறு:

### டாக்டர் வீட்டில்

பருத்தித்துறைத் தொகுதியில் கற்கோவளம் என்னுமிடமுண்டு. இக்கிராமத்தில் வசிப்பவர்தான் டாக்டர் அருளானந்தம்; இவரது வீட்டுக்கருகில் பல வீடுகள் உண்டு. டாடர் வீட்டில், அவரது துணைவியாருடன் வேறு இரு டையன்களும் உள்ளனர்.

### சாப்பிட்ட கையுடன்...

நேற்றுமுன்தினமிரவு சுமார் பத்தரை மணியளவில், வீட்டிலுள்ள நால்வரும் இரவுசாப்பாட்டை முடித்துக்கொண்டிருந்தனர். சாப்பாட்டை முதலில் முடித்த டாக்டர், கைகழுவுவதற்காக சாப்பாட்டு அறையை விட்டு வெளியே வந்தார். அப்போது திடீரென அவர் முன் தோன்றிய முகமூடி அணிந்த ஒரு இளைஞர், தனது கைத்துப்பாக்கியைக் காட்டிப்பயமுறுத்தி, "உள்ளே போ" என்றுஅழைத்துச் சென்றுராம். அதிர்ச்சியடைந்தடாக்டர் வீட்டின் உள்ளே நகரவே, மேலும் இரண்டு முகமூடி துப்பாக்கி இளைஞர்கள்அங்குவந்தனர். சம்பவத்தைநேரில்கண்டு டாக்டரின் மனைவியும், பையன்களும் செய்வதறியாது திகைத்து நிற்க; துப்பாக்கி இளைஞர்கள் மூவரும், வீட்டிலிருந்தநான்குபேரினதும் கண்களைத் துணியினுல் கட்டி, சாப்பாட்டு மேசையின் நான்குகால்களுடனும் அவர்களை இணைத்துக் கட்டினுர்கள்.

### நகைகளைத் தேடினர்

இதனைத்தொடர்ந்து வீட்டிலிருந்த நகைகளை இத்துபாக்கி இளைஞர்கள் 'மோப்ப' மிட்டனராம்.

வீட்டின் அலுமாரியிலும், வேறு, பத்திரமான இடங்களிலும் இவர்கள் மிகவும் வேகமாகச் 'சோதனை' நடத்தினராம்.

### கட்டவிழ்த்து அறைக்குள் பூட்டினர்

சிறிது நேரத்தின் பின்னர் துப்பாக்கி இளைஞர்கள் மூவரும் மீண்டும் டாக்டரிடம் சென்று அவரையும், துணைவியாரையும் கட்டவிழ்த்துஇருவரையும்வீட்டின் அறை ஒன்றுக்குள் கூட்டிச்சென்று, அறைக்குள் வைத்துப் பூட்டிவிட்டு 'மெதுவாக'வே நழுவி விட்டனராம்.

கொள்ளையர்கள் அங்கிருந்து

(8ம் பக்கம் பார்க்க)

இலங்கை-இங்கிலாந்து

## கிரிக்கெட் டெஸ்ட் இன்று தொடருகிறது

(கொழும்பு)

இங்கிலாந்து கிரிக்கெட் கோஷ்டிக்கும் இலங்கை கிரிக்கெட்கோஷ்டிக்குமிடையிலான முதலாவது கிரிக்கெட் டெஸ்டின் மூன்ரும் நாள் ஆட்டம் இன்று காலை 10 30 மணிக்கு கொழும்பு சரவணமுத்து மைதானத்தில் தொடர்ந்து நடைபெறும்.

டெஸ்ட் கிரிக்கட்

## இரவுநேர தொலைக்காட்சியில்

(கொழும்பு)

வடமாகாண கிரிக்கெட் ரசிகர்களின் நலன்கருதி இன்றும் நாளையும் இரவுநேரத்தில் தொலைக்காட்சியில் தமிழில் கிரிக்கெட் வர்ணனை இடம் பெறும்.

இதற்கான ஏற்பாடுகளை இலங்கை ஒலிபரப்பு கூட்டுதா

(8ம் பக்கம் பார்க்க)

## தடுப்புக்காவல் சட்டவிரோதமானது

(கொழும்பு)

நீர்வேலி வங்கிக்கொள்ளை தொடர்பாக சரவணை முருகையா கைதுசெய்யப்பட்டு இராணுவமுகாமில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளமை சட்டவிரோதமானதென்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இவரை தடுப்புக்காவலிலிருந்து விடுதலைசெய்து மஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜராக்கி சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று அத்தீர்ப்பில் தெரி

(8ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் தொண்டமான் மீண்டும் கிளிநொச்சிக்கு வருகிருர்

### பால்சேகரிப்பு நிலையததிற்கு அத்திபாரக்கல் நாட்டுவார்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியில் ஒரு கோடி ரூபா செலவில் பால் சேகரிக்கும் நிலையமொன்று நிறுவப்படவிருக்கிறது.

கிராமிய அபிவிருத்தியமைச்சர் திரு. எஸ். தொண்டமான் இதற்கான நிதியை ஒதுக்கியுள்ளார்.

இந்நிலையத்தில் 10 ஆயிரம் லீட்டர் பால் சேகரிக்கப்படவிருக்கிறது,

வவுனியா, மன்னர், மாங்குளம் போன்ற இடங்களில் எடுக்கப்படும் பால் கிளிநொச்சியில் அமைக்கப்படும் நிலையத்துக்கு கொண்டுவரப்படும்.

நிலையம் அமைப்பதக்கான செலவை அபிவிருத்திசபையும் மாவட்டஅமைச்சும் பொறுப்பேற்கவிருப்பதாகவும், அமைச்சர் தொண்டமான் ஒதுக்கும் ஒரு கோடி ரூபாவும் பால் பதனிடும் இயந்திரங்கள் வாங்குவதற்கு மட்டுமே பயன்படுத்தப்படுமென்றும் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அடுத்தமாதம் முதல்வாரத்தில் இக் கட்டிடத்துக்கான அடிக்கல்லை அமைச்சர் திரு. தொண்டமான் நாட்டி வைப்பார். புரட்டாதிமாதம் கட்டிடம் திறந்துவைக்கப்படும்.

யாழ். மாவட்ட திட்டமிடல் அதிகாரி திரு. எஸ். சிவதாசன் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். (மா)

## சிவாஜி ராஜ்ய சபா உறுப்பினர்

சென்னை, பெப். 19 நடிகர் திலகம் திரு. சிவாஜிகணேசன் ராஜ்ய சபா உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரபல ஹிந்தி நடிகை திருமதி நர்கீஸ் காலமானதைத் தொடர்ந்து அவரின் இடத்திற்கு திரு. சிவாஜி கணேசன் நியமிக்கப்பட்டுள்ளார். (வெ)

OUT TODAY
Saturday Review
SRI LANKA

கிளிநொச்சி கொலைவழக்கு

## சாட்சியங்கள் முரண்பாடு எதிரி விடுதலை

(யாழ்ப்பாணம்)

மனைவியைக் கொலைசெய்ததாக கணவன்மேல் குற்றம் சுமத்தப்பட்டு, யாழ். மேல் நீதிமன்றத்தில் நேற்று நடைபெற்ற வழக்கு விசாரணையில் சாட்சியங்களின் முரண்பாடு காரணமாக, விசாரணை தொடர்ந்து நடாத்தப்படுவதை ஜூரி சபையினர் விரும்பாததையிட்டு, மேல்நீதிமன்ற நீதிபதி திரு. எம். ஜாமில் வழக்கைத் தள்ளுபடி செய்து, எதிரியை விடுதலை செய்தார்,

79ம் ஆண்டு பெப்ரவரி 5ம் திகதி கிளிநொச்சியில் கனகம்மா (26வயது) என்பவரை அவரது கணவரான துரைராசா(32 வயது) என்பவர் கொலைசெய்தார் என்ற குற்றச்சாட்டின்மீது யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனப் எம். ஜாமில் முன்னிலையில் விசாரணை நடைபெற்றது.

(8ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

உன்பாதத்தின் அழகைச் சுவைக்க
பூமாதேவி விழைகின்றாள்.
உன் கூந்தலுடன் விளையாடக் காற்று
காத்திருக்கின்றது.

— காரல் கபிரஹீல்

# நமது நோக்கு

## தனியார் 'தருமமும்' தேச அபிவிருத்தியும்

பண்டைக்கால வாழ்வில் எல்லாநாடுகளிலும், எல்லா மதக் கொள்கையின் படியும் கருணை மக்களின் கடமையென்றும் ஈகையே தலைசிறந்த தருமம் என்றும் வற்புறுத்தப்பட்டு வந்தது.

'தருமம்' என்றாலே தானம் என்றும் பிச்சைஎன்றும்பொருளாகி விட்டது. 'ஐயா தருமம் கொடு' என்றால் பிச்சைபோடு என்பது அர்த்தம்.

கடந்த கால சமூகவாழ்வில் ஏழைகளின் பசிக்கும் வறுமையினால் உண்டாகும் வேறு துயரங்களுக்கும் சமூக தருமம் விதித்து வந்த மருந்து ஒன்றே! அது ஈகை. ஈகையும் இரக்கமும் தருமத்தில் முதல் இடம் பெற்று உலகத்தில் வறுமைக்கு மருந்தாகி வந்தன.

உலக ரீதியிலே தானும் வறிய நாடுகளுக்கு செல்வ நாடுகள் 'தருமம்' என்ற அடிப்படையில் உதவி வந்தது வரலாற்றில் ஒருமுக்கிய பொருளாதார அம்சமாகும்.

சமயக் கோட்பாடுகளால் உந்தப் பெற்ற பல பெரிய அமெரிக்க, ஆங்கில மதஸ்தாபனங்கள், பரோபகார நோக்குடன் தொழிற்பட்ட பல பிரமாண்டமான நிறுவனங்கள் உலகில் வறிய நாடுகளுக்குதவின. இந்த நற்சேவையில் அமெரிக்க லோகோபகாரம் உலக வரலாற்றில் முன்னிற்கின்றது.

இன்று நிலைமை முற்றிலும்மாறிவிட்டது, காலணி ஆட்சியிருந்து சுதந்திரம் பெற்ற நாடுகள் தனியார் 'தருமத்தில்' தங்கியிருக்க முடியாது. அது நாட்டைக் காப்பாற்றும் வல்லமையற்றது.

எல்லோருக்கும் உணவும், உடையும், கல்வியும், மருத்துவ வசதியும்; காணியும், வீடும் என்ற பொது நல அரசின் இலட்சியத்தைக் கொண்டு போட்டி போட்டு ஆட்சிக்கு வந்த அரசுகளே ஓரளவிற்கு பொதுமக்கள் வாழ்வை நலம்பெற உயர்த்தியிருக்கிறது.

நாட்டில் தொழிற்படும் கல்வி நிலையங்கள், தொழிற்சாலைகள், மருத்துவமனைகள், மற்றைய பல நன்மைகள் உணவு பங்கீடு, வீடமைப்பு, நெடுஞ்சாலை, நீர், மின்விநியோகம் இவற்றை தனியார்துறை நாட்டுக்கு உதவியிருக்கமுடியுமா?

எங்கள் நாடு மட்டுமல்ல, பலவளர்முக நாடுகளின் அபிவிருத்திக்கதை இவ்வாறே! அந்நிய ஆட்சியில் இவை எதுவும் நாம் கண்டு கொள்ள முடியாத காரியங்கள்!

அமெரிக்கா போன்ற செல்வநாடுகள், உலகவங்கி. சர்வதேச நிதிநிறுவனம், இத்தகைய தேசிய வளர்ச்சித்திட்டங்களுக்கு உதவி வந்தது உண்மை, அவ்வித உதவி அவசியம்.

ஆனால் அவற்றின் மனப்பாங்கு இன்று மாறிவிடுகின்றது. வளர்முக நாடுகளுக்கு உதவும் தாராள மனப்பான்மை மறைந்து விட்டது. 'தருமம்' கேட்பது தேசத்துசகே ஒரு அவமானம்; உதவியே வேண்டப்படுகிறது; அது கேள்விக்குறி.

இதற்குத்தலையடி அடித்திருக்கிறார் ஜனாதிபதி றீகன். தம்முடைய நாட்டின் வளர்ச்சிக்கு தனியார் நிறுவனங்கள் உதவட்டும். மத்திய அரசின் அடிப்படைக் கட்டமையான தேசிய பாதுகாப்பில் அவர் கண்ணும் கவனமும் செல்கின்றது. உலகின் பெரும் பகுதியைப் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் ஜனாதிபதி தம்முடைய தீவிர பொருளாதார கொள்கை மாற்றத்தால் ஐரோப்பிய, ஆசிய நாடுகள், வளர்முக நாடுகள் அனைத்தையும் வாட்டிவிட முயல்கின்றார் போலும்!

1930ல் உலகைச் சுருட்டிய பொருளாதார வீழ்ச்சி (Depression) இன்று மறுதலிக்குமோ வென்பதே கேள்வி. ஒன்றாய்ச் சுருங்கிய இன்றைய உலகில் "அமெரிக்கா தும்மினால்ஐரோப்பாவுக்கு இருமல், வளர்முக நாடுகளுக்கு சுவாதம்" என்று விகடமாக விளங்கப் படுததலாம்.

நாட்டின் அபிவிருத்தி தனியார்துறை வளர்ச்சியில் தங்கியிருக்கின்றது என்பது றீகனின் சுலோகம். பொதுநல அரசின் மான்யங்கள் நாட்டைக் குட்டிச்சுவராக்கும். எனவே இவற்றையெல்லாம் கைவிட்டு தனியார் துறைக்கு ஊக்கம் அளித்தால் அவர்பெருக்கும் செல்வம் நாட்டுமக்களைக்காப்பாற்றும். இது மேற்கில் 'அவியும்' இங்கு வேலை செய்யாது.

இந்த அரசியல் வேதாந்தம் எங்கள் நாட்டுக்கும் எட்டிவிட்டது தெளிவு, அரசாங்கத்திடம் பணம் இல்லை. தனிப்பட்டவர்களிடம் ஏராளமான பணம் உண்டு, நாட்டின் பொது சேவைகளுக்கு உதவ அவற்றை நிர்வகிக்க முன வருக என்று ஜனாதிபதி ஜெயவர்த்தன அடிக்கடி அழைப்பு விடுவது நாமறிந்ததே! இன்று நிலவும் வரட்சிக்கு யார் உதவமுடியும், உதவ வேண்டும்?

தனியார், கூட்டுத்தாபனங்கள், பல நாடு கூட்டுறவு நிறுவனங்கள், ஒரு பாடசாலை, ஒருபல்கலைக்கழகம், ஒருமருததுவமனை சட்டுவதற்கு முன்வருமா? தங்கள் 'செல்வ'த்தைப் பெருக்கத் தகாத வேலைகளில் ஈடுபடுவதை நாம் நேற்றுச்சுட்டிக் காட்டியிருந்தோம்.

தனியார் துறையின் 'தருமம்'மாமியார்வீடுபோலிருக்கும். மகாசௌ[illegible], நாலு நாட் சென்றால் நாய்படாப் பாடு!

### பாரதி தரிசனம் - 4

# இறுதி யாத்திரையில் இருபது பேர்கூட இல்லை

சிலவாரங்களின் பின் பாரதி இறந்தபோதிலும் யானைத் தாக்குதலுக்கும் அவர் மரணத்துக்கும் சம்பந்தம் இருக்கவில்லை,

உடல் வலுவிழந்திருந்த காலத்தில் ஒருவாரகாலம் வயிற்றோட்டத்துககு உள்ளானதையடுத்தே பாரதி மரணமானார்.

உயிர் துறப்பதற்கு இரண்டு மணி நேரத்துக்கு முன்னர் அவர் கடைசியாகப் பேசிய போது ஆப்கானிஸ்தான் பற்றி தாம் எழுதப்போகும் ஒரு கட்டுரையைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தாராம்.

### இறுதிக்கிரியை

1921 செப்டம்பர் 8ம் திகதி பாரதியின் உடல் திருவல்லிக்கேணியில் தகனம்செய்யப்பட்டபோது அதன் எடை நூறு றாத்தல்கூட இருக்கவில்லையாம். இறுதியாத்திரையில் சுமார் 20 பேருக்கும் குறைவானவர்களே கலந்து கொண்டனர்.

அவர் மரணமடைந்தபின் சில ஆண்டுகளில் அவரது பாடல்கள் சென்னை அரசினால் தடைசெய்யப்பட்டன. பாரதியின் ஆக்கங்களில் பல தொகுப்புக்களை வெளியிட்டுவந்த பாரதி பிரசுராலயம் முற்றுகையிடப்பட்டு பிரதிகள் எல்லாம் பறிமுதல்செய்யப்பட்டன. அதன்பின் அந்த தேசபக்த கவிஞனைத் தமிழ் நாட்டார் மறந்துவிட்டனர். சுதந்திரத்தின் பின்னரே அவருக்கு உரிய இடம் கிடைக்கலாயிற்று.

### குடும்ப வாழ்வில்

பாரதியார் உணர்வும் உள்ளமும் அவரது கவிதைகளில் என்றும் நிலைத்துவிட்டன. அவரைப் பற்றிய நினைவு அவரது குடும்பத்தவர்கள் மத்தியில் இன்னமும் பசுமையாக இருந்துவருகின்றது.

அவரது இரு புத்திரிகளான தங்கம்மாளும் சகுந்தலாவும் தமது குழந்தைகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் 'பாரதி' என்ற அடைமொழி வரக் கூடியதாக பெயர்சூட்டியுள்ளனர். இது அந்தக் குடும்பத்தினர் மத்தியில் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றது.

தங்கம்மாளின் இரண்டாவது மகளான லலிதா பாரதி தமது பாட்டியாரான (பாரதியின் துணைவியார்) செல்லம்மா சொல்லக் கேட்ட பல சுவையான தகவல்களை தருகின்றார். செல்லம்மா பாரதிக்குப் பின்னரும் பலஆண்டுகள் வாழ்ந்த பின் 1955ம் ஆண்டிலேயே காலமானார்.

செல்லம்மாவுக்கு எழுதிய காதல் பாடங்கள், பாரதியின் மறைவுக்குப்பின்னரே வெளியிடப்பட்டன. செல்லம்மா என்பது கண்ணம்மா என மாற்றப்பட்டதாம்.

### காதல் கவிதைகள்

"எனது பாட்டியார் இளமையில் மிகவும் அழகாகவே இருந்துள்ளார். தாத்தா, பாட்டிக்கு அந்தக் காலத்தில் ஏராளமான காதல் கவிதைகளை எழுதியுள்ளார்.

தாத்தா பொல்லாத கோபக்காரர். எதற்கும் உணர்ச்சிவசப்பட்டுப்போவார், குடும்பம் எப்போதும் பதட்டமாகவே இருக்கும் பாட்டியார் பொதுவாகவே அமைதியானவர். தாத்தாவின் உணர்ச்சிப் போக்குகளுக்கெல்லாம் ஈடுகொடுத்து இமாலயப் பொறுமையை வளர்த்துக்கொண்டார்.

### கைகோத்து உலாவுவார்

இளவயதில் எட்டயபுரத்திலிருந்தபோது பாட்டியாருடன் கைகோத்துக் கொண்டு வெளியில் சுற்றிவர அழைப்பாராம் தாத்தா.

அவ்வாறு செய்வது அந்தக் காலத்தில் எவ்வளவு சங்கடத்தை ஏற்படுத்தியிருக்கும் என்று சொல்லவேண்டுமா? மற்றப் பெண்களுக்குமுன்னால் எவ்வளவு தலைகுனிவாக இருந்திருக்கும்? ஆனால் தாத்தாவின் விருப்பத்தை அவர் எதிர்த்ததே இல்லை. இந்தப் பழக்கத்தைச் கைவிடச்செய்வதற்குப் பாட்டியார் முயன்றதே இல்லை.

பாண்டிச்சேரியில் இருந்த போது அவர்களின் வாழ்வு அமைதியாகவும், சங்கடங்கள் அற்றதாகவும் இருந்துள்ளது.

### நடித்தும் காட்டுவார்

பாரதியார் அங்கு வாழ்ந்த காலத்தில் தாம் எழுதும் கவிதைகளை முதலில் செல்லம்மாவுக்கே பாடிக்காட்டுவாராம். அதுவும் கவிதையை அதன் கருத்திற்கேற்ப உணர்ச்சிகளோடு வாசிப்பதுமட்டுமல்ல அபிநயங்களோடு நடித்தும் காட்டுவாராம். கடைசியில் 'பாட்டு எப்படி இருக்கும்' என்றும் கேட்டுவைப்பாராம். செல்லம்மா வழமைபோல் 'நன்னா இருக்கு' என்று சொல்வார். அது அவருக்குப் பரம திருப்தியைக்கொடுக்குமாம்.

தமது பிள்ளைகள் இரண்டிடமும் மிக அன்பு பாராட்டி வந்துள்ளார். பாரதி அந்தக் காலத்தில் ஏனைய தந்தைமார்களைப் போலல்லாமல் தமது மக்களோடு அதிக நேரத்தை அவர் செலவிடுவாராம். அவர்களுக்குப் பாட்டெழுதச் சொல்லிக்கொடுத்து அவர்கள் எழுதியவைகளைப் பாடவும் சொல்லிக்கொடுப்பாராம்.

இரு பெண்களும் நல்ல கவிஞர்களாகவே விளங்கியுள்ளனர். ஆனால் அவர்கள் பாடசாலைக்கே அனுப்பப்படவில்லை. பாரதியாருக்கு பள்ளிக் கல்வியில் அப்போது நம்பிக்கை இருக்கவில்லை.

பிள்ளைகளுக்கு தாமே எழுதப் படிக்கக் கற்பித்ததுமாத்திரமின்றி அச்சமின்றியும் உயர் குணங்களோடும் ஜான்ஸி ராணியைப்போல வாழவேண்டும் என்று அவர்களுக்குப் புகட்டியதோடு நில்லாமல் போர் வாளைப் பயன்படுத்துவதற்கும் கூட அவர்களுக்குப் பயிற்சியளித்தாராம். அதேசமயம் அவர்களின் பழக்கவழக்கங்களில் மிகவும் கண்டிப்பாகவே இருந்துள்ளார். பண்பாட்டுக்கு மாறாக உடையிருந்தாலோ அதிக சத்தம் போட்டுச் சிரித்துவிட்டாலோ அவர் சினம் கொள்வாராம்.

வெளியில் சென்று வீடு திரும்புகையில் வீட்டிலுள்ள பெண்களும் குழந்தைகளும் சத்தம்போட்டுப் பேசியும் சிரித்துக்கொண்டுமிருப்பார்களானால் கூடத்தில் வைக்கப்பட்டுள்ள ஹார்மோனியத்திடம் மெதுவாகச் சென்று இரண்டு கைவிரல்களாலும் அதனை மீட்டிச் சத்தம் எழுப்புவாராம். உடனே வீட்டில் எல்லாச் சத்தமும் கப்சிப் என்று அடங்கிவிடும்.

லலிதா பாரதி இன்னொரு இரகசியத்தையும் சிரிப்போடு வெளியிட்டார்.

தாத்தா சந்தேகப் பேர்வழி, வெளியில் சென்று திரும்பியதும் வீட்டுக்கு யார் வந்திருந்தார்கள், பெண்பிள்ளைகள் அவர்களுடன் பேசினார்களா என்றெல்லாம் விசாரிப்பாராம். எதையும் கவனமாக ஆராய்ந்து கண்டுபிடித்துவிடுவார். வீட்டுக் கதவின் முன்னால் உள்ள மணல் தரையில் கால் தடங்கள் இருக்கிறதோ என்று கண்டுவிட்டு வீட்டுக்கு வந்த மனிதரைப்பற்றி விசாரிப்பாராம்.

பாரதியாரை அவாது கறுத்தக் கோட்டோடும் வெள்ளைத் தலைப்பாகையோடும் தவிர வேறு உடையில் காண்பது மிகவும் அரிது. கமது மீசையை நறுக்காகத் தாமே வெட்டிவிட்டுக்கொள்வார். சில சமயம் தாடியும் வளர்த்ததுண்டு. வெளியில் செல்லும்போது அவ்வப்போது மனதில் பட்டதற்கேற்ப நெற்றியில் பொட்டு அல்லது நாமம் இட்டுக்கொள்வார். ஒரு முறை பாரதியார் ஒரு துண்டைமாத்திரம் இடுப்பில் கட்டிக்கொண்டு தலைப்பாகையுடன் வீட்டில் இருப்பதைக் கண்டு செல்லம்மா அதிர்ந்துபோனாராம். விசாரித்ததில் யாரோ ஒரு பிச்சைக்காரனுக்குக்கொடுத்துவிட்டிருக்கிறார் என்பது தெரியவந்ததாம்.

இன்னொரு முறை ஒரு சேலை வாங்கிவரும்படி செல்லம்மா கொஞ்சம் பணம் கொடுத்தனுப்பினார் பாரதியிடம். அந்தக்காலத்தில் பெண்கள் கடைகளுக்குப் போவதில்லை. ஆண்களே பெண்களுக்கான உடுதுணிகளும் வாங்கிவருவார்கள் பல மணி நேரம் கழித்து பாரதியார் வீடு திரும்பினார். கைநிறையப் புத்தகங்கள் கொண்டுவந்திருந்தார், முகம் நிறைய மலர்ச்சியோடு செல்லம்மாவை அழைத்து அந்தப்புத்தகங்களைப் பார்க்கும்படி கூவி அழைத்தார். செல்லம்மா வந்து பார்த்துவிட்டுச் சேலை எங்கே என்று கேட்டார்.

'என்ன சேலை' என்று பாரதி திருப்பிக் கேட்டாராம். 'நான் வாங்கிவரும்படி பணம் கொடுத்து அனுப்பியது' என்று பதில் சொலல பாரதியின் முகத்தில் அசடுவழியும் புன்னகை தவழ்ந்தது.

"அதையெல்லாம் மறந்து போனேன் செல்லம் அந்தப் பணத்தில் தான் இந்த நூல்களை வாங்கினேன். நீ கவலைப்படமாட்டாயே, இங்கே பார், அந்த சேலையைவிட இந்த நூல்கள் பெறுமதிமிக்கவையல்லவா?" என்று கூறினாராம் பாரதி. சிறுவிஷயத்திலும்பாரதிக்கு சடுதியில் கோபம் வரும் சற்றைக்கெல்லாம் வந்தசுவடு தெரியாமல் மறைந்துவிடும்.

அடுக்களையில் உணவுகள் எல்லாம் எப்பொழுதும் மூடி வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதில் மிகவும் கண்டிப்பானவர் குடிநீர் சொதிக்க வைக்கப்படவேண்டும்.

அவர் சுவைக்கும் வெற்றிலை முதலில் தண்ணீரால் கழுவி பின்வெந்நீரால் கழுவப்படவேண்டும். இதில் ஏதும் பிசகுநடந்துவிட்டால்போதும் பாரதிக்கொதித்து நெருப்பு எழுப்பிவிடுவார். சற்றைக்கெல்லாம் அது மாறிவிடும். மனைவியிடம் சென்று 'செல்லம் உன்னை கடிந்து கொண்ட பாரதி செத்துப் போனான். நான் புதிய பாரதி வந்திருக்கிறேன்" என்பாராம். இவ்வளவுக்கும் செல்லம்மா சிறிதும் சிணுங்கமாட்டார். ஏதும் மனக்கஷ்டம் ஏற்பட்டாலும் வெளியில் காட்டிக்கொள்ளமாட்டார்.

மரண காலத்தில் பாரதியார் திருவல்லிக்கேணியில் துளசிங்க பெருமாள் கோயில் வீதியில் வசித்து வந்தார்.

இறக்குமுன் சில வாரங்கள் சுகவீனமுற்றிருந்தார் வயிற்றோட்டம் ஏற்பட்டிருந்தது. மருந்துகள் குடிப்பதில் அவ

(7ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணம் - தனங்கிளப்பு குறுகியதூர சேவை ரத்தின் எதிரொலி:

# பஸ்ஸிலிருந்து ஒரு பிரயாணி தவறிவிழுந்து படுகாயம்!

(யாழ்ப்பாணம்)

கேரதீவு — யாழ்ப்பாணம் சேவையில் நேற்றுக்காலை ஈடுபட்ட வடபிராந்திய போக்குவரத்துச் சேவை பஸ்ஸில் பிரயாணிகளின் நெருக்கடி ஏற்பட்டதால், நாவற்குழியில், பஸ் ஓடிக்கொண்டிருக்கும் போது பிரயாணி ஒருவர் பஸ்ஸிலிருந்து தவறி வீதியில் விழுந்து பலத்த காயத்திற்குள்ளானுர்.

இரு தினங்களுக்கு முன்னரும், இதே பஸ்ஸில் பிரயாணிகள் நெருக்கடியால் மிதிபலகையில் நின்ற பஸ் கண்டக்டர் நாவற்குழியில் தவறிக் கீழே விழுந்தது குறிப்பிடத்தக்கது.

### நடத்துநரும் விழுந்தார்!!

இம்மாதம் 1ம் திகதி முதல் யாழ்ப்பாணத்திலிருந்து தனங்கிளப்பு வரை நடைபெற்று வந்த பாடசாலை சேவை பஸ் திடீரென நிறுத்தப்பட்டதாலேயே இந்தப் பிரயாணிகள் நெருக்கடி ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

பாடசாலை பஸ்சேவை நிறுத்தப்பட்டதால், யாழ்ப்பாண நகரிலுள்ள கல்லூரிகளுக்குச் செல்லும் தனங்கிளப்பு, நாவற்குழி மாணவர்கள், இடநெருக்கடி காரணமாக சாதாரண பஸ்ஸில் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதஞல் சில மாணவர்கள் மீண்டும் வீட்டுக்கே திரும்பிச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறதாம்.

கேரதீவிலிருந்து காலை 7—30 மணிக்குப் புறப்படவேண்டிய இந்த பஸ் சில நாட்களில் ஒரு மணிநேரம் தாமதித்தே தனங்கிளப்பு வருவதால், மாணவர்கள் உரிய நேரத்திற்குப் பாடசாலை செல்லமுடியாத நிலைமையும் உள்ளதாகக் கூறப்படுகிறது.

போக்குவரத்துச் சபை அதிகாரிகள் இப்பகுதிக்கு நேரில் விஜயம்செய்து குறித்த பஸ் சேவைகளை நேரில் பார்வையிட்டுத் திரும்பிய பின்னரும் இந்நிலை தொடர்ந்தும் நீடித்து வருவது பற்றிப் பிரயாணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

மீண்டும் பாடசாலை சேவை பஸ்ஸை யாழ்ப்பாணத்திற்கும் தனங்கிளப்பிற்குமிடையில் சேவைக்கு விடுமாறு, மாணவரும், பெற்ருேரும் வேண்டுகோள் விடுக்கின்றனர். (அ)

---

## தேசியஇளைஞர் சேவை மன்ற

# அகில இலங்கை

## கலாசாரப்போட்டி முடிவுகள்

(கொழும்பு)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திஞல் நடத்தப்பட்ட 1981ம் ஆண்டுக்கான கலாசாரப் போட்டிகளில் வெற்றி பெற்ருேரின் விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. பரிசளிப்பு வைபவம் அடுத்தமாதம் நடைபெறுகிறது.

பரிசு பெற்ருேர் விபரம் வருமாறு:

### அகில இலங்கை மேடை நாடகப் போட்டி

1. சிறந்த தயாரிப்பு-1. 'ஓ' மானிடமே' ரூ. 1500 திரு. கண்ணப்பு நடராசா, யாழ்ப்பாணம். 2. சிறந்த தயாரிப்பு; 'சேவை செய்தாலே வாழலாம்' ரூ. 1000 செல்வி வி. சுலோசனுதேவி, மட்டக்களப்பு. 3. சிறந்த இசையமைப்பு: 'போன மச்சான் திரும்பி வந்தான்' ரூ. 750 இ. முரளிதரன், அல்வாய். 4. சிறந்த ஒப்பனை: 'ஓ' மானிடமே' ரூ. 750 திரு. க. நடராசா, யாழ்ப்பாணம். 5. சிறந்த நடிகர்: 'ஓ மானிடமே' ரூ. 500, விஞசித்தம்பி பாஸ்கரன், மே/பா க. நடராஜா, யாழ்ப்பாணம். 6. சிறந்த நடிகை: 'சாந்தி' ரூ. 500 செல்வி அ. கமலவதனு, கரவெட்டி மேற்கு. 7. சிறந்த மேடை அலங்காரம்: 'பாதை தெரியாத பயணிகள்' ரூ. 250 திரு. மீலாத்கீரன், கொழும்பு.5 8. சிறந்த உடையமைப்பு: 'போன மச்சான் திரும்பிவந்தான்' ரூ. 250. அ. புஷ்பநாதன், வதிரி, கரவெட்டி.

### அகில இலங்கை புதுக்கவிதைப் பாடற் போட்டிகள்

தனித்து: 1. பா. வசந்தி, ரூ. 200 ஆவரங்கால், புத்தூர். 2. சி. இராஜசேகர். ரூ. 150 வதிரி, கரவெட்டி. 3. க. சிவானந்தமணி, ரூ. 100 ஆவரங்கால், புத்தூர். 4. இ. முரளிதரன், ரூ. 75, அல்வாய் தெற்கு. 5. எஸ். பொற்கிளி, ரூ. 75, மந்துவில். 6. தம்பு சர்மபாலசிங்கம், ரூ. 75, தெல்லிப்பழை.

### அகில இலங்கை நாட்டுப்பாடல் போட்டிகள்

குழு: 1, செல்வி இரா. இராசமலர், ரூ. 300, பண்ணுகம் தெற்கு. 2. செல்வி இ. மேரி திரேசா, ரூ. 200, மிருசுவில்,

தனித்து: 1. க. ஆறுமுகம், ரூ. 200, மிருசுவில். 2. சி. மனேன்மணி, ரூ. 150, கச்சாய் வடக்கு. 3. இ. முரளிதரன், ரூ. 100, அல்வாய் தெற்கு. 4. செல்வி மு. யோகேஸ்வரி, ரூ. 75, குடத்தனை மேற்கு. 5. பொ. தங்கம்மா, ரூ. 75, கச்சாய் தெற்கு. 6. இராஜசேகர், ரூ. 75, வதிரி, கரவெட்டி.

### அகில இலங்கை நடனப்போட்டிகள்

1 சாஸ்திரிய நடனம்: செல்வி கி. இராஜினிதேவி ரூ. 300 மல்லாகம்.

2. செல்வி மேரி மாகிறெட் ஜேம்ஸ் ரூ. 200 யாழ்ப்பாணம், 3. செல்வி வலாநிதி சாமித்தம்பி ரூ. 100 மட்டக்களப்பு.

### அகில இலங்கை சிறுகதைப்போட்டி 1981

1. செய்துல் ஆப்தீன் சித்தி ஸலீமா ரூ. 500 அக்குறனை, 2. முருகன் சுகுணு ரூ. 300 வாழைச்சேனை, 3. எம். வீ. பரீதா ஸுல்பிகா ரூ. 200 பண்டாரகம, 4. அனலை ஜே. கிருபாலட்சுமி ரூ. 75, அனலைதீவு, 5. ஜெகதேவி தர்மலிங்கம் ரூ. 75 நல்லூர், 6. பரந்தன் கலைப்புஷ்பா ரூ. 75 பரந்தன்.

### அகில இலங்கை கவிதைப் போட்டிகள்

1. மாணிக்கம் பஞ்சலோகரஞ்சன் ரூ. 300 அச்சுவேலி, 2. மு. லெ. முகம்மது பாறுக் ரூ. 00 பாலமுனை, 3. திருமதி நளினி சசிதரன் ரூ. 150 மட்டக்களப்பு, 4. கந்தையா நவரத்தினம் ரூ. 75 களுவாஞ்சிக்குடி, 5 முகமட் ஹுசைன் பிரோஸா ரூ. 75 கல்முனை, 6. சணு கார்த்திகா ரூ. 75 புசல்லாவ.

### அகில இலங்கை கட்டுரைப் போட்டிகள்

1. செல்வி வாணி ராசவன்பிள்ளை ரூ. 300 கல்முனை, 2 முகம்மது ஹுசைன் பிரோசா ரூ. 200 கல்முனை, 3 இராமையா கலாரமணி ரூ 150 பலாங்கொடை, 4சித்தி மஸ்தா மொகமட் ஹம்ஸா ரூ. 76 காலி, 5 மாலதி பரமநாதன் ரூ. 75 யாழ்ப்பாணம், 6 செய்னுல் ஆப்தின் சித்தி ஸலீமா ரூ. 75 அக்குறணை.

---

# 10லட்சம் பேரிடம் வானெலி அனுமதி பத்திரம் இல்லையாம்

(கொழும்பு)

சுமார் பத்து லட்சம் பேர் அனுமதிப்பத்திரமில்லாமலேயே வானெலிப் பெட்டிகளை வைத்திருக்கிருர்கள் என்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மத்திய கிழக்கு நாடுகளில் வேலை பார்க்கும் இலங்கையர்கள் தினமும் 200 அல்லது 300 வானெலிப் பெட்டிகளை நாடு திரும்பும்போது விமான நிலையத்திற்குக் கொண்டுவருகின்றனரென்றும், இவற்றில் சில வானெலிப்பெட்டிகளுக்கு மட்டுமே அனுமதிப்பத்திரங்கள் பெறப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

வானெலி அனுமதிப்பத்திரங்கள் வழங்குவது பற்றி கருத்து தெரிவித்த உதவி சுங்க சேகரிப்பாளர் திரு. நவரட்ணசேனரத், அனுமதிப்பத்திரங்கள் விமான நிலையத்திலும் அங்கு வரும் வானெலிக்கருவிகளுக்கு உடனுக்குடன் வழங்கப்படல் வேண்டுமென்றும், ஆனல் தபால் திணைக்களம் இவ்வாறு உடனுக்குடன் அனுமதிப் பத்திரங்களை வழங்கும் வகையில் உத்தியோகத்தர்களை நிலையாக வைப்பதில் அக்கறை காட்டவில்லையென்றும் தெரிவித்தார். (கி)

---

# பராமரிப்புப் பணம் ரூ. 64,000 செலுத்தத் தவறிஞராம்!

### பிரதிவாதி டாக்டருக்கு பிடிஆணை

(புலோலி)

தாபரிப்பு பணத்தைக் கட்டத்தவறி நீதிமன்றத்திற்குச் சமூகமளிக்காத டாக்டரொருவருக்குக் கஷ்டநிவாரணபிடிஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் தனிப்பட்ட முறையில் வைத்தியசாலையை நடாத்திவரும் டாக்டர் ஒருவருக்கே கஷ்டநிவாரண பிடிஆணைபிறப்பிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறையில் வசிக்கும் செல்வரத்தினம் என்பவர் தனது கணவர் தனது பிள்ளைகளுக்கு செலுத்தப்பட வேண்டிய தாபரிப்புப் பணம் 64,000 ரூபாவைச் செலுத்தவில்லை என்று பருத்தித்துறை நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்திருந்தார். இவ்வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரதிவாதி மன்றில் ஆஜராகி இருக்கவில்லை. பிரதிவாதி சார்பில் சட்டத்தரணி சாந்த பெரேரா ஆஜராகிஇருந்தார். விண்ணப்பதாரிசார்பில்சட்டத்தரணிகளான திருமதி. அர்ச்சுனு, எம். சோமசுந்தரம் ஆகியோர் அனுசரணையுடன் சட்டத்தரணி கே. ஜெயக்கொடி ஆஜராகி இருந்தார்.

விண்ணப்பதாரி சார்பில் ஆஜரான சட்டத்தரணிஜெயக்கொடி இந்த வழக்கிலே இடப்பட்ட இடைக்கால உத்தரவுப்படி பிரதிவாதி 79.ம் ஆண்டு ஜூன் மாதம் தொடக்கம் மாதாமாதம்4 பிள்ளைகளுக்கும் 2000 ரூபா பராமரிப்புப் பணமாக இதுவரை 64.000 ரூபா செலுத்தப்பட வேண்டுமென்றும் ஆஞல் பிரதிவாதி இன்றுவரைஇதன் ஒரு பகுதிப் பணத்தையேனும் செலுத்தவில்லை என்றும் இப்பணத்தைஅறவிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

பிரதிவாதி சார்பில் ஆஜரான சட்டத்தரணி சாந்த பெரேரா மாதாமாதம் செலுததுமாறு உத்தரவிடப்பட்ட 2.000 ரூபாவைச் செலுத்த முடியாமலிருப்பதாகவும் பிரதிவாதியின் வருமானம் போதாததால் 64,000 ரூபாவைச் செலுத்துவதற்கு கஷ்டமாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

நீதவான் இடைக்கால உத்தரவு அமுலில் இருப்பதாஞல் 64,000 ரூபாவையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தெரிவித்து பிரதிவாதிக்கு கஷ்டநிவாரண பிடியாணை பிறப்பித்துவழக்கை மார்ச் மாதம் வரை ஒத்தி வைத்தார்.

---

# காங்கேசன் வரும் நிலக்கரிக் கப்பல்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை புதிய துறைமுகத்திற்கு இம்மாதம் இறுதியில் 5000 தொன் நிலக்கரியுடன் கப்பல் ஒன்று வரவிருப்பதாக அறியப்படுகிறது.

காங்கேசன்துறை புதிய துறைமுகத்தில் கடற்கரையிலிருந்து 3 80 அடி தூரத்தில் அமைக்கப்பட்ட புதிய துறைமுக மேடையை அண்மையில் அமைச்சர் திரு, சிறில் மத்தியூ திறந்து வைத்திருந்தார். இம்மேடையில் 1000தொன் நிறையுள்ள கப்பல்கள் வந்து நிற்க முடியும். கடற்கரையிலிருந்து 4300 அடி தூரத்தில் மற்ருெரு துறைமுகமேடை அமைக்கும் வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. அங்கு 12 ஆயிரம் தொன் நிறையுடைய கப்பல்கள் தரித்து நிற்கமுடியும் என தெரிவிக்கப்படுகிறது.

துறைமுக வேலைகள் துரித கதியில் நடைபெறும் இச் சமயத்தில் நிலக்கரியுடன் கப்பல் ஒன்று இம்மாத இறுதியில் இங்கு வர இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் எரிபொருளுக்கு பதிலாக நிலக்கரியை உபயோகிப்பதற்காக இயந்திரசாதனம் ஒன்று பொருத்தப்பட்டு அதனை அண்மையில் அமைச்சர் சிறில்மத்தியூ ஆரம்பித்துவைத்திருந்தார். இதற்காகவே 5000 தொன் நிலக்கரியுடன் இக்கப்பல் வருகிறது.

---

# பிரதமர் தட்சரின்மகனைத்தேட செலவான பணம்

### அவரே பொறுப்பேற்பார்

லண்டன், பெப். 19

கடந்த மாதம் பெரும் காரோட்டப்போட்டி ஒன்றில் கலந்துகொண்டு சஹாராப் பாலைவனப் பகுதியில் காணுமற்போன தமது மகனைத் தேடுதற்கேற்பட்ட செலவைத் தாம் பொறுப்பேற்பதாக பிரதமர் திருமதி தட்சர் அறிவித்துள்ளார்.

ஆறு நாட்கள் திருமதி தட்சரின் மகனை ஆகாய மார்க்கமாகத் தேடியதன் மூலம் 3 லட்சம் ஸ்ரேலிங் பவுண்கள் செலவாகியதென்றும், பெருமளவு செலவை அல்ஜீரிய நாடே செய்ததென்றும் திருமதி தட்சர் தெரிவித்தார்.

திருமதி தட்சர் மேலும் தெரிவிக்கையில், பொதுச் சொத்திலிருந்து தாம் இதனைச் செலுத்தப் போவதில்லையென்றும், தனிப்பட்ட முறையிலேயே தாம் இதனைச்செலுத்தவிருப்பதாகவும் தெரிவித்தார். (கி)

---

# என்கோமா பதவி நீக்கம்

லண்டன், பெப். 19

சிம்பாப்வே அரசாங்கத்திலிருந்து அமைச்சர் திரு. என், கோமாவும் அவரின் இருசகாக்களும் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

திரு என் கோமாவும் அவரது இரு சகாக்களும் சிம்பாட்வே அரசாங்கத்திற்கு எதிராக சதிவேலைகள்ல் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே பிரதம மந்திரி திரு. றெபேர்ட்முகாபேயிஞல் பதவி நீக்கம் செய்யப்பட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

திரு. என் கோமாவின் கட்சிக்கு சொந்தமான வயல்களில் ஆயுதங்களும், வெடிமருந்துகளும் புதைக்கப்பட்டிருந்ததைத் தொடர்ந்தே அவரையும், சகாக்களையும் அரசாங்கத்திலிருந்து திரு. முகாவே நீக்கியதாகவும் கூறப்பட்டது. (வெ)

# "எதிரி வெடி வைத்ததும் இறந்தவர் கீழே விழுந்தார்"

## அல்லைப்பிட்டி கொலை வழக்கில் சாட்சியம்

(ஊர்காவற்றுறை)

''இரண்டு தோட்டாவை எடுத்து ஒன்றைப்போட்டு இறந்தவருக்கு எதிரி வெடி வைத்தார். அந்தச் சூட்டுடன் இறந்தவர் கீழே விழுந்துவிட்டார்.''

இவ்வாறு அல்லைப்பிட்டியில் வைத்து கந்தர்மடத்தைச் சேர்ந்த ஸ்ரீகந்தராசாவை துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததாக அல்லைப்பிட்டி வாசியான கந்தையா தனபாலசிங்கத்துக்கு எதிராக ஊர்காவற்றுறைப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திரு. ரி. கே. என். திலகன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சாட்சியமளிக்கையில் பிலிப்பையா ஜெயக்கொடிஎன்பவர் கூறினார்.

சாட்சி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

சென்றவருடம் 8ம் மாதம் 16ந்திகதி எனக்கு நினைவிலிருக்கின்றது. எதிரியை எனக்கு முன்பு தெரியும். இறந்த ஸ்ரீஸ்கந்தராசாவையும் எனக்கு நன்கைத் தெரியும். அன்றுபிற்பகல் நால்ரை மணிக்கு நான் எனது சகோதரி வீட்டிற்குச் சென்றேன்: நான் எனது சகோதரி வீட்டிற்குச் சென்று திரும்பும்போது தனபாலசிங்கம் கீழேயும் இறந்தவர் மேலேயும் சந்திரனும் இடையில் நின்று துவக்கொன்றை பிடித்துக் கொண்டு நின்றார்கள். வீதியிலிருந்து 10யார் அப்பால்தான் இச்சம்பவம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. சம்பவம் நடக்கும்போது வீதியில் கார் 40 ஒன்று நிற்பாட்டப்பட்டிருந்தது. அதன் இலக்கம் சி. என். 9525. அவர்கள் மல்லுப்பிடித்தபோது நான் அவ்விடம சென்று அந்தத் துவக்கைப் பிடித்து ஏன் சண்டை பிடிக்கிறீர்கள்?என்றுகேட்டு துவக்கை அவர்களிடமிருந்து பிடிங்கி எடுத்தேன். அந்த நேரம் எனது தகப்பன் பிலிப்பையாவும் அந்த இடத்துக்கு வந்து துவக்கைப் பிடுங்க எனக்கு உதவி செய்தார்.

துவக்கைப் பிடுங்கிய பின்னர் நானும் எனது தகப்பனும் இறந்தவரை ஒரு பக்கமாகப் போகும்படி கூறிவிட்டு எதிரியையும் சந்திரனையும் மறுபக்கமாகப் போகும்படி கூறினேம். இவர்கள் இருவரும் நிற்பாட்டப்பட்டிருந்த கார்ப்பக்கமாகப் போனார்கள். அந்த நேரம் துவக்கு என்னுடைய கையில்தான் இருந்தது. அந்த நேரத்தில் எதிரி அணிந்திருந்த சேட்டில் இரத்தக் கறை படிந்திருந்ததைக் கண்டேன். ஆனல் நான் காயம் எதனையும் காணவில்லை எப்படி இரத்தக்காயம் ஏற்பட்டது என்று எதிரி எனக்குக் கூறவில்லை எதிரி காரடிக்கு வந்த பின்பு தன்னுடைய துவக்கைத் தரும்படி கேட்டார். நான்துவக்கைத்தருகின்றேன் சண்டை ஒன்றும் வேண்டாம். என்று போகும்படி கூறினேன்.

''அப்படிக் கூறியதும் எதிரி தனக்கு இறந்தவர் கத்தியால் குத்திப்போட்டார் எனக்கூறி அவரை நான் சுடாமல் விடப்போவதில்லை என்று கூறினர். நான் நின்றால் என்னையும் சுடுவதாக பயமுறுத்தினர். அதன் பின்னர் இரண்டுதோட்டாவை எடுத்து ஒன்றைப் போட்டு இறந்தவருக்கு வெடிவைத்தார். அந்த சூட்டுடன் இறந்தவர் கீழே விழுந்து விட்டார், அதன் பின்னர் எதிரி இன்னொரு தோட்டாவை அந்தத் துவக்கினுள் திணித்ததும் நான் பயத்தினல் அவ்விடத்தைவிட்டு சிறிது தொலைவில் சென்றுவிட்டேன். அந்த நேரத்தில் எதிரி துவக்கையும் கொண்டு இறந்தவர் விழுந்து கிடந்த இடத்தை நோக்கிச் சென்றார். அந்த நேரத்தில் சந்திரன் கார் நிற்பாட்டப்பட்டிருந்த இடந்தில் நின்றார். பின் நான் பயத்னுதில் சகோதரியின் வளவினுள் நின்றபொது இன்னொரு வெடிச்சத்தம் இறந்தவர் விழுந்து கிடந்த பக்கமாகக் கேட்டது. நான் அந்தப்பக்கமாகப் பார்த்தபோது எதிரி கார் நிற்பாட்டப்பட்டிருந்த பக்கமாக வந்து கொண்டிருந்தார். அந்த நேரத்தில் அவர் கையில் துப்பாக்கி வைத்திருந்தார். எதிரி காரில் ஏறும்போது யாரும் இச்சம்பவத்தைப் பற்றிச் சாட்சியம் சொன்னல் அவர்களையும் சுடுவதாகப் பயமுறுத்தினர். பின்பு எதிரி காரை திருப்பி வேலணைப் பக்கமாகச சென்றார்.''

இவ் வழக்கில்யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்சாட்சிகளை நெறிப்படுத்தினர். எதிரி தரப்பில் சட்டத்தரணி திரு. ந. ஸ்ரீகாந்தா ஆஜராகினர். சாட்சி தொடர்ந்து எதிரிகள் சட்டத்தரணியால் குறுக்குவிசாரணை செயயப்பட்டார். (அ)

பண்டத்தரிப்பு

# ஆஸ்பத்திரியை விஸ்தரிக்க நடவடிக்கை

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையை மேலும் அபிவிருத்தி செய்து பொதுமக்களுக்கு மேலும் சிறந்த வைத்திய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்குமுகமாக வைத்தியசாலை அபிவிருத்திச்சங்கம் ஒன்று அமைக்கப் படவுள்ளது. இச்சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் மேற்படி வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவில் நடைபெறவுள்ளது..

இதற்கான ஒழுங்குகளை சஙக அமைப்பாளர்களான மாதகல் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. சி. நடராஜா, பண்டத்தரிப்புப் பாவனையாளர் சங்கச் கெயலாளர் திரு. என். எம். கந்தசாள ஆகியோர் மேற்கொண்டுள்மினர்.

# இடமாற்றம்

(கோண்டாவில்)

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை கொக்குவில் உப பணியகத்தில் கடமையாற்றிய எழுதுவினைஞர் திரு. ஹென்றி மன்னர் மாவட்ட அபிவிருத்தி சபைக்கு மாற்றலாகி உள்ளார். இவரின் இடத்திற்கு யாழ்ப்பாணம் மாநகரசபையில் கடமையாற்றிய திரு. இராமச்சந்திரன் வநதுள்ளார்.

கொச்குவில் உப பணியகத்தில் கடமையாற்றிய தொழில் நுட்ப உத்தியோகத்தர் திரு. கெங்கேஸ்வரன் உடுவில் பணியகத்திற்கும், உடுவில் பணியக தொழில்நுட்ப உத்தியோகத்தர் திரு. மகேந்திரன் கொக்குவில் உப பணியகத்திற்கும் மாற்றலாகியுள்ளார்.

ஃ ஃ ஃ

(அரியாலை)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் பத்து வருடங்களுக்கு மேலாக ஆசிரியராகப் பணிபுரிந்த திரு. என். சிவகுமாரன் கோப்பாய் மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளார்.



செல்வி ரஜினியின் பரத நாட்டிய அரங்கேற்றம் 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு இராம கிருஷ்ண மிஷன் மண்டபத்தில் இடம்பெறவிருக்கின்றது. 'நடனலயா' திருமதி ஜெயலட்சுமி கந்தையாவின் மாணவியும் கொழும்பு மாநகரசபை தொழிற்சாலை பிரதம பொறியியலாளர் திரு.இரங்கநாதன் தம்பதிகளின் புதல்வியுமான செல்வி ரஜினியின் அரங்கேற்றத்தில் முன்னள் யாழ் அரசாங்க அதிபரும் தற்போதைய திருகோணமலை அரசாங்க அதிபருமான திரு. லயனல் பெர்னண்டோ பிரதம அதிதியாக கலந்துகொள்வார்.

புத்தக விமர்சனம்:

# "அவன் அவள் அவர்"

உடலோடு உயிரிடையன்ன மடந்தையோடு எம்மிடை நட்பு'' என்று வள்ளுவன் கூறிய நட்பைப் பற்றி தமிழிலே அழகான ஒரு நூல் ஒன்று வெளிவந்துள்ளது. ஆம் இருமன ஒன்றிப்பாம் திருமணம் பற்றி ''அவன் அவள் அவர்'' என்னும் அருட் திரு வி. ம. தாசன் எழுதிய நூல் சேந்தான்குள குடும்ப மேய்ப்புப்பணி நிலைய வெளியீடாக வெளிவந்துள்ளது.

இந் நூல் ஐந்து தலைப்புக்களில் வெளிவந்துள்ளது. முதற்தலைப்பில் திருமணத்தின் புனிதத்தன்மை விளக்கப்படுகிறது. அடுத்து திருமணத்தின் வேரான அன்பு பற்றியும் விளக்கும் அடிகள். அடுத்த தலைப்பில் வறுமை, கற்பு, கீழ்படிதல், நீதி போன்ற திருமண உறவு செழிப்படையத் தேவையான உரங்கள் பற்றி கூறுகிறார். திருமணம் என்பது ஒருநாள் கூத்தல்ல . ஆயிரங் காலத்தை காணப்போகிற பயிர்ச்செய்கை என்பதை உணர்ந்த அடிகள் 3ம், 4ம் தலைப்புகளில் கணவன் மனைவிக்கிடை . இருக்கவேண்டிய தொடர்புகள் பற்றியும் ''பால் உறவை'' பற்றியும் எடுக்து விளக்குகிறார். இறுதித்தலைப்பில் மனிதவாழ்க்கை வட்டத்தின் கூறுகளான தாய். தந்தை பெற்றோர், பிள்ளை வளர்ப்பு பற்றி கூறும் அடிகள் தாயின் கருப்பையில் உயிர்ப்புறும் மனிதனைப்பற்றியும் சிந்திக்க மறக்கவில்லை. ''பிறப்புக்கட்டுப்பாடு'' என்னும் தலைப்பில் அடிகள் எடுததுரைக்கும் சில உண்மைகளை இங்கு சற்றுப் பார்ப்பது நூலின் யதார்த்தப் போக்கை புரிந்து கொள்ள உதவும்,

கர்ப்பத்திலுள்ள குழந்தையும் கூட மனித உயிர், அதனைக்சொல்வது கொலை என்ற கிறிஸ்தவ முடிவுக்கு மாறுபடாத அடிகள் அதே வேளை சில குடும்பங்களுக்கு குழந்தை பெருக்கம் பொருளாதாரவாழ்வியல் சிக்கல்களை ஏற்படுத்தப்லாமென்பதை மறுக்கவும் இல்லை. இதனல் இதற்கு ஒரே தீர்வு இயற்கை முறை குடும்பக்கட்டுப்பாடுஎன்கிறார் அடிகள்.

இவ்வாறுக பல அரிய சருத்துககளோடு கிறிஸ்துவின ஒளிப்பார்வையுள் வாழும் பணமக்களை அட்டைப்படமாகத்தாக்கி சிறந்தரகத் தாளில் வெளிவந்துள்ள இந் நூல் கண்ணையும் கருத்தையும் கவரும் படைப்பு படைத்த வியாகுலதாசன் அடிசளுக்கும் வெளியிட்ட குணசீலன் அடிகளுக்கும் பாராட்டுக்கள் அவன் அவள் அவர் உனக்கும் எனக்கும் எல்லோருக்கும் தேவையான நூல்.

- பற்றிமாகரன்

# ஆடுதிருடியவர் விளக்கமறியலில்!

(புலோலி)

மறி ஆட்டைத்திருடிய ஒருவர் மார்ச் மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தாதோட்டத்தைச் சேர்ந்த செல்லத்துரை என்பவருக்குச்சொந்தமான 500 ரூபா பெறுமதியான மறியாட்டைத் திருடியவரான வேலாயுதம் இராசதுரை என்பவர் பருத்தித்துறைப் பொலிசாரிடம் அகப்பட்டுக்கொண்டார். பருத்தித்துறைப் பொலிசார் இவரை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர் செய்தனர். எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார். நீதவான் எதிரியின் கைவிரல் அடையாளத்தைப் பதிவுசெய்யுமாறு உத்தரவிட்டதுடன் மார்ச்மாதம் 1ம் திகதி இவருக்கான தண்டனை விதிக்கப்படும் வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார்.

# விசேட சேவை அதிகாரிகள்

(புலோலி)

பருத்தித்துறைத்தொகுதிக்கு விசேட சேவை அதிகாரிகளாக நியமிக்கப்படோர் விபரம் அல்வாய் வடக்கு தெற்கு இ இராசேந்திரம், மருதங்கேணி செம்பியன்பற்று ம. யோசேப், அல்வாய் தெற்கு த. பன்னீர் செல்வம், முள்ளியான் சுண்டிச்குளம் ந. பழனிநாதன் பருத்தித்துறை கற்கோவளம் க சிவராசா, புலோலி தெற்கு மேற்கு க. அருளானந்தம், அம்பன்துன்னலை வடக்கு சோ. வசந்தகுமார், தும்பளைபுலோலி கிழக்கு இ. புலேந்திரன் ,நாகர் கோவில் குடத்தனை கரையூர் க. யோகேந்திரநாதன்.

# நிர்வாகிகள்

(அரியாலை)

அரியாலை மேற்கு தியாகராசா சன சமூக நிலையத்தின் வருடாந்தக் கூட்டம் திரு. ச. யோக சேகரம் தலைமையில் நடைபெற்றது. புதியவருட நிர்வாகிகள் தெரிவில் தலைவராக திரு இ. இராசையாவும், உப தலைவராக திரு க. இராசேந்திரமும், செயலாளராக செல்வி லட்சுமி கந்தையாவும், பொருளாளராக திரு. சி. சதாசிவமும்,, உறுபபினர்கள் ஐந்துபேரும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## இசைநிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

கொய்யாத்தோட்டம் அருள் மிகு வைரவசுவாமி கோவிலில் நடைபெறும் சிவராத்திரி விழாவில் சிறப்பு நிகழ்ச்சியாக 'பக்திப் பாடல் அரசு' ஏ. ஆர். ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி பக்திப்பாடல்கள் பாடுவார். அன்று அதிகாலை கல்வியங்காடு வைரவ கோவிலிலும் அவரது இசைநிகழ்ச்சி நடைபெறும்.

CENTRIC

செண்ட்றிக் விவசாய பம்ப்.

- உலகப் புகழ் றுபின் பெட்ரல்/மண்ணெண்ணெய் அல்லது யன்மார் டீசல் எஞ்சின் பொருத்தியது.
- நிகர் நிற்க முடியாத எரிபொருட் சிக்கனம். தனித்துவமான தன்னியக்க எரி பொருள் மாற்றும் விசை.
- இடம் மாற்றும் வசதி கொண்ட பாரம் குறைந்தது.
- நிலைத்து நிற்பதற்காக வார்ப்பிரும்பிலும் பித்தளையிலும் உருவானது.
- செண்ட்றிக் - 30 வருடங்களுக்கு மேல் 60,000 பேர் நம்பிப் பாவிப்பது.

விலை: ரூ. 4,750/- முதல்.

1½'', 2'', 3'', 4'' ரகங்களில் கிடைக்கும்.



ஜினசேன லிமிட்டெட்,
4, உணுப்பிட்டியா வீதி,
கொழும்பு 2.
தொலைபேசி: 26558/9

# கோப்பாய்க் கலாசாலை முத்தமிழ் விழா ஏற்பாடுகள்

[யாழ்ப்பாணம்]

கோப்பாய் அரசினர் பயிற்சிக்கல்லூரி வருடாந்த முத்தமில் விழாவிற்கான ஏற்பாடுகள் தற்போது கல்லூரி முதல்வர் திருமதி இ. ஆனந்தகுமாரசாமியினுல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன இதன் ஆரம்ப நடவடிச்கையாக இல்லங்களுக்கிடையே போட்டிகள் நடாத்தப்பட்டுவருகின்றன.

கதை சொல்லும்போட்டி மேல், கீழ் மத்திய பிரிவு என்ற அடிப்படையிலும், பேச்போட்டி பொதுவாகவும் நடந்துமுடிந்துவிட்டனஇப்போட்டிகளில் மூன்று இல்லங்களிலிருந்தும் முறையே தலா இருவர் மூவர் என்ற எண்ணிக்கையில் பங்குபற்றினர்.

இதனைத்தொடர்ந்துபாட்டு, நுண்கலை, நாட்டிய நாடகம் (மகளிர்) வரலாற்று நாடகம் (ஆண், பெண் தனி) உட்படப் பல போட்டிகளும் இல்லங்களுக்கிடையே நடாத்தப்படும்.

அடுத்த தவணை ஆரம்பத்தில் விளையாட்டுப்போட்டி நடைபெற விருப்பதால் மாணவர்கள் தற்போது வேண்டிய ஆயத்தங்களை மேற்கொண்டுள்ளார்கள்.

இந்தத்தவணை இல்லங்களுக்கிடையிலான வலைப்பந்தாட்டம் (பெண்கள்), கரபந்தாட்டம் (ஆண்கள்) ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன. (உ)


## பதவிகள் வெற்றிடம்

1. பொதுமுகாமையாளர் தரம்11

கல்வித்தகைமை: பட்டதாரி கூட்டுறவுப் பயிற்சியும் 3 வருட அனுபவமும் அல்லது கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுப் பிரமாணப்படி

சம்பளம்: 600/- — 1000/-

40/- × 10/-

2. கணக்காளர் தரம் 11

கல்வித்தகைமை: கணக்கியல் பட்டதாரி 1 வருட அனுபவம் அல்லது கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுப் பிரமாணப்படி.

சம்பளம்: 500/- — 840/-

20/- × 5 + 30/ × 8

விண்ணப்பப்படிவங்களையும், நிபந்தனைகளையும் மற்றும் விபரங்களையும் கேட்டு சொந்த முகவரியிட்ட முத்திரை ஒட்டிய தபால் உறையை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவுத்திகதி 6-3-82**

**தலைவர்,**

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

சாவகச்சேரி,
18—2—82. (2317)



## தங்க நகைகளுக்கும் தங்க கட்டிகளுக்குமான பணவசதி

**த பிறுன்ஸ் கம்பனி**
வழங்கும் மற்றுமொரு புதிய திட்டமாக
**தங்க நகைகளுக்கும்,**
**தங்க கட்டிகளுக்குமான**
**பணவசதி**
வழங்க முன்வந்துள்ளது. உங்களுக்கு பண நெருக்கடி ஏற்படும்போது, எம்முடன் கலந்தாலோசித்து, தவணை முறையிலோ, குறிப்பிட்ட கால எல்லையிலோ, பணத்தைச் செலுத்தி உங்கள் தங்க நகைகளையோ அல்லது பவுண் கட்டிகளையோ பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:

**விற்பனை முகாமையாளர்,**

# த பிறுன்ஸ் கம்பனி லிமிட்.

**249, மின்சாரநிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**போன்: 7680**


# நீதித்துறையில் சலுகைக்கு இடமேயில்லை!

## மேல் நீதிமன்றத் தலைவர் கருத்து

(கொழும்பு)

''சலுகை காட்டல், துவேஷம் காட்டல், பயம், மனமயக்கம் போன்ற நிலைகளுக்கு உள்ளாகாமல் நீதிநிர்வாகம்நடைபெறவேண்டும். இதையே புத்ததர்மமும் வலியுறுத்துகின்றது.''

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதியரசர் திரு. பாரிந்த ரணசிங்க மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார். மேன் முறையிட்டு நீதிமன்றத்தின் 5 வது தலைமை நீதியரசரான திரு. பாரிந்த ரணசிங்கா நீதிமஸ்ற சட்டத்தரணிகள் மத்தியில் நிகழ்த்திய உரையில் மேற்குறித்தவாறு எழுத்தும் பூர்வமபகவும் உணர்வுப்பூர்வமாகவும் எடுத்துக்கொள்ளப்படும் சத்தியப்பிரமாணம் இப்பொழுது இயற்கையாகவே செயல் உருப்பெற்று வருகின்றது; என்றுர். இந்தக் கருத்துகள் எமக்குள் ஆழமாகவே பதிந்துவிட்டுள்ளன. அவை எமது வாழ்க்கையின் ஒரு பகுதியாகவே அமைந்துவிட்டன என்றுர்.

தலைமை நீதியரசர் திரு. பாரிந்த ரணசிங்காவையும் புதிய நீதியரசர்களான திரு. ஜி. பி. எஸ். தசில்வா, திரு. எஸ், அவேவர்த்தன ஆகியவர்களை வரவேற்பதற்காக மேன்முறயீட்டு நீதிமன்றத்தில் வைபவரீதியியாக இந்த அமர்வு நிகழ்ந்தது.

தலைமை நீதியரசருடன் நீதியரசர்கள் ஜே. சி. ஈ. த. அல்விஸ், எம்.எம். அப்துல்காதர், எச். ரெட்றிகோ. ஈ. ஒ. டி. அதுக்கோறலே, விக்டர் பெரேரா, எச். டி. தம்பையா, ஆனந்த ஜி. த. சில்வா, ஓ. எஸ். எம். செனவிரட்ண, பி. ஈ. த. சில்வா, ஜி. பி. எஸ். த. சில்வா, எஸ். அபேவர்தன ஆகியோர் அமர்ந்திருந்தனர்.

கொழும்பு மாவட்ட நீதவான், மேலதிக நீதவான்கள், கொழும்பு பிரதம நீதவான், மேலதிக பிரதம நீதவான்களும் பிரசன்னமாய் இருந்தனர். மன்றின் உள்ஆசனப்பிரிவில் சட்டமா அதிபர் திரு. சிவா பசுபதி, இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் திரு. ஏ. சி டி. சொய்ஸா, திரு. எஸ், நடேசன் கியு. ஸி., திரு. எச். டபிள்யு. ஜயவர்த்தன கியு. ஸி., திரு. சி. தியாகலிங்கம் கியு. ஸி., திரு. ஏ. எச். சி. த. சில்வா கியு. ஸி. திரு. சிறி.பெரேரா கியு. ஸி. திரு. பி. நவரட்ணராஜா கியு. ஸி. சிரேஷ்ட சட்டத்தரணிகளான ஜே. டபிள்யு. சுபசிங்க, தயாபெரேரா, எச். எல் த. சில்வா, ஜி. எப். சேதுகாவலர், கே. என். சொக்ஸி ஆகிவோர் அமர்ந்திருந்தனர்.

மேன்நீதிமன்றப்பதிவாளர், அவரது சகாக்கள் நீதிபரிபாலணத்துறை உயர் அதிகாரிகளும் பிரசன்னமாய் இருந்தனர்.

திரு பாரிந்த ரணசிங்சா தொடர்ந்துபேசுகையில், கல்வி அறிவின் மேன்மையுற்ற பெருமதிப்புவாய்ந்த சட்டத்தரணிகளைப் பெற்றிருப்பது நீதிமன்றத்துக்குப் பெரும் வலுவைத் தருகின்றது. சட்டத்தின்படி ஒழுங்கானமுறையில் நீதியை நிலைநாட்டுவதற்கு நீதிமன்றுக்கும் சட்ட நிபுணர்களுக்குமிடையில் நெருங்கிய ஒத்துழைப்பு இருக்கவேண்டும் என்றுர்.

# இன்று மேடையேறுகிறது

(யாழ்ப்பாணம்)

1979.ம் ஆண்டுக்கான கலாசாரப் பேரவையின் அகில இலங்கை ரீதியிலான நாடகப் போட்டியில் சிறந்த பிரதி, சிறந்த நெறியாள்கை, சிறந்த நடிகர் அகியவற்றிற்கான ஜனதிபதி விருதுகளைப் பெற்ற யாழ் நாடக, அரங்கக்கல்லூரி தயாரித்து வழங்கும் சி. மௌனகுருவின் 'சங்காரம்' இன்று 20.ம் திகதி மாலை7.15 மணிக்கு இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் மேடையேறுகிறது.


**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


## ''கிராமங்களின் வளர்ச்சிக்கு சனசமூக நிலையங்கள் ஆற்றும் பங்கு''

(மட்டுவில்)

''ஒவ்வொரு கிராமத்தின் உயர்வுக்கும் செழிப்புக்கும், பக்கபலமாக உள்ளது அவ்வக் கிராமங்களில் சிறந்த முறையில் இயங்கிவரும் சன சமூக நிலையங்களே. இந்த அடிப்படையில் எமது சன சமூக நிலையத்தை மென்மேலும் வளர்க்க, பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தின்கீழ் சாவகச்சேரி எம். பி. 25 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளார். அதைக்கொண்டு எமது சிரமதானத்தையும்முன் வைத்து, நாம் ஒரு நவீன கட்டிடத்தைஅமைக்கவேண்டும்''

இவ்வாறு மட்டுவில் சோமாஸ்கந்தா சன சமூக நிலையத்தின் 3வது ஆண்டு பூர்த்திவிழாவுக்கும், பொதுக் கூட்டத்திற்கும் தலைமை தாங்கி உரைநிகழ்த்திய முன்ஞள் தலைவர் திரு. சி என். குணவீரசிங்கம் கூறினுர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ''நாம் மூன்ருவது ஆண்டிலேயே எமது சனசமூக நிலையத்தை நன்கு வளர்த்துள்ளோம். இன்னும் இங்கு வளர்ச்சிக்கு இடமிருக்கிறது. இதை இனிமேல்வரும் நிர்வாகசபை வளர்க்கவேண்டும். என்று கேட்டுக்கொண்டார். புதிய நிர்வாகசபை தெரிவும் நடைபெற்றது.

தலைவர் திரு. எஸ். எம். அருளம்பலம், உபதலைவர் திரு கா. வேதநாயகம், செயலாளர்: திரு. பொ. திருநாவுக்கரசு,உபசெயலாளர்: திரு. ப. இலங்கேஸ்வரன், பொருளாளர்: திரு. இ. இராஜநாயகம், மேலும் ஐவர் கொண்ட ஒரு நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## தரம் உயர்வு

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக் கழகத்திலிருந்து எழுதுவினைஞர் தரம் II க்காக நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய பின்வருவோர் 1.1.81 ஆம் ஆண்டு தொடக்கம் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினுல் எழுதுவினைஞர் தரம் IIக்கு உயர்த்தப்பட்டுள்ளார்கள்:

பொ. கந்தசாமி, ஆ. குணரத்தினம், வி இராசதுரை, திருமதி க. உருத்திரசுந்தரம், செல்வி ஞானு வல்லிபுரம், திருமதி டொ. மனேரஞ்சன்.


**சிசில் SISIL குளிர் சாதனப் பெட்டிகள்**

இவை உடனே பெறக்கூடிய வாய்ப்பு தற்காலிகமாக இப்பொழுது இருக்கிறது. சொற்ப தொகையே கையிருப்பில் உள்ளபடியால் தேவையாயின் உடனே வாங்கி, தாமதமாக பெறும் வாடிக்கையை தவிர்க்கவும்.

**யமஹா (YAMAHA) மின் உற்பத்தி இயந்திரங்கள், மோட்டர் சைக்கிள்கள்**

இவற்றிற்கு நாமே வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள். ஆகவே அறிமுக விலையாக விசேட கழிவு விலைகளில் தற்பொழுது விற்பனை செய்கிறோம். இவ் விலைகள் மாறுமுன் உடனே உங்கள் தேவையை பூர்த்தி செய்யவும். வெகுவிரைவில் மின்வெட்டு எதிர்பார்க்கப்படுவதால் உடனே ஒரு மின் உற்பத்தி இயந்திரம் வாங்குங்கள்.

**சன்யோ (SANYO) ''டாடுங்' (TATUNG) 'எக்கோ (EKKO) தொலைக்காட்சி பெட்டிகள்**

எல்லோரினதும் தேவைக்கேற்ப பல விலைகளில் கறுப்பு/வெள்ளை, கலர் ரெலிவிசன் செற்றுகள் எம்மிடம் உள்ளன. விசேட கழிவு விலைகளில் கிடைக்கும்.

குளிர்சாதனப் பெட்டி திருத்துதல், ஸ்பிரேபெயின்ற் அடித்தல் வேலைகளை நாம் குறைந்த செலவில் திருப்திகரமான முறையில் பயிற்சிபெற்ற நிபுணர்களால் செய்து கொடுப்போம். உங்கள் திருத்துதல் வேலைகளை எம்மிடம் கையளிக்கவும்.

# சிலோன் மேர்சன்ஸ் லிமிட்டெட்

484, ஆஸ்பத்திரி வீதி, : யாழ்ப்பாணம்.



● அன்ரனு பொருத்துதல் ● றேடியோ ● மணிக்கூடு ● ரி. வி. பழுதுபார்த்தல்
● பாடல்களை பதிவு செய்தல் அனைத்துக்கும்

அன்ரனு அமைப்பில்
சென்னை - இலங்கை
துலக்கமாகத் தெரிகிறது.

**வீனஸ் றெக்கோடிங் றேடியோ வாச் வேக்ஸ்**

266/1, ஸ்ரான்லி வீதி, ஸ்ரீதர் தியேட்டர் முன் யாழ்ப்பாணம்.

**ஹரன்** யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்...ஜெய்சித்ரா
**வண்டிக்காரன் மகன்**

**வெலிங்டன்** மானிப்பாய்
தினசரி: 2.30 6.15 9.15
21—2—82 வரை
**மேஜர் சந்திரகாந்த்**


**ஸ்ரீதர்** தினசரி: 10:30, 2:30, 6:00, 9:30
யாழ். நகர் சிவாஜி – ஜெயலலிதா
**பட்டிக்காடா பட்டணமா**
(புதிய பிரதி)

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
10—30, 2—30, 6—30, 9—30
**ஞானக்குழந்தை**
22—2—82 சிவராத்திரியை முன்னிட்டு
விசேட நள்ளிரவுக் காட்சியுண்டு.

**ராணி** (யாழ்.நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
கமலஹாசன் - ரதி நடித்த
**உல்லாசப் பறவைகள்**
(ஈஸ்ட்மன் கலர்)

**சாந்தி** (யாழ்.நகர்) 10—30, 2—30, 4—45
7—00: 9—30
Last day 26—2—82
JIM BROWN, JIM KELLY
FRED WILLIAM SON
**Three The Hard Way**
(Action-color-adults)
27—2—82 HORROR EXPRESS

**யாழ். றீகல்** தினசரி 10—30, 2—30, 6—30, 9—30 நான்குகாட்சிகள்
**இன்றே பாருங்கள்!**
நிறம் மாறுத பூக்கள் புகழ்
**விஜயன்**
**ராஜேஷ்**
சுருளிராஜன்,
மாஸ்டர்
ரவிக்குமார்,
சத்தியகலா,
சுவர்ணலத
(ஈஸ்ட்மென் கலர்)
டைரக்ஷன்:-
''நீயா'' புகழ்
துரை



**ராஜா** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
மலையாளப் பட வரலாற்றில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வசூலிலும் பெரும் சாதனையை ஏற்படுத்தி இலங்கையில் செம்மீன் வெற்றிப் படத்தையடுத்து வெளிவரும் வெள்ளி விழா சித்திரம்.
இந்திய ஜனாதிபதியின் சிறந்த பரிசுக்கான தங்கப் பதக்கத்தைப் பெற்றது.





பிரதாப் சுரேகா **தக்காரா**
(கலர்—மலையாளம்)
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)


# "பெண் விடுதலைக்காகப் பேசும் துணிவு அன்று பாரதிக்கு மட்டுமே இருந்தது"

- கல்லூரி உப அதிபர்

(மாவிட்டபுரம்)

''கல்லூரி மாணவர் மத்தியில் பாரதியார் பற்றிய கருத்துக்கள் வளர்க்கப்படுவதுடன் மாணவர் அவற்றை சிந்தனை வயப்படுத்தி உண்மைகளை உணரவேண்டும். கல்லூரி மன்றங்கள் இவற்றை மாணவர்களிடையே வளர்க்க முழு மனதுடன் ஈடுபடுதல் அவசியம்''

இவ்வாறு தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியில் இடம் பெற்ற பாரதி நினைவாஞ்சலியின்போது கல்லூரி உபஅதிபர் திரு. ஜி. எஸ். இரத்தினேஸ்வர ஐயர் கூறினார்:

கல்லூரி அதிபர் திரு. பொ. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் உப அதிபர் மேலும் பேசுகையில் கூறியதாவது: ''தமிழ்ப் பற்றும், சுதந்திர வேட்கையுங்கொண்டு பாரதியார் பாடிய பாடல்கள் மரபுவழி இலக்கியமுறையை ஒட்டிய புதுப்பாணியில் அமைந்துள்ளன. பழமையைப் போற்றியும் புதுமையைப் புகுத்தியும் புரட்சிக் கருத்துக்களைப் படைத்த தன்மையினால் அவர் புரட்சிக் கவிஞன் என்ற மகுடத்தைப் பெற்றார். இருள் சூழ்ந்த காலகட்டத்தில் சமுதாயக் கொடுமைகளை அழித்து சிறந்ததோர் சமுதாயத்தை கட்டி வளர்க்க பாடுபட்டவர் அவர். பரந்த உள்ளத்துடன் தேசியநோக்கில் கருத்துக்களை வெளியிட்டதால் உலகம் போற்றும் தேசியவாதியாகவும் விளங்கினார்.

பெண்கள் விடுதலைக்காக பேசும் துணிவு அன்றையகாலகட்டத்தில் பாரதியாரிடமே இருந்தது. அதுமட்டுமன்றி தொழிலாளர்களை விழித்தெழச்செய்யும்வகையில் அவர் கூறிய கருத்துக்கள் தொழிலாளர்களது மறுமலர்ச்சிக்கு மூலகாரணமாக அமைந்தன. பாரதியாரை நாம் மறக்க முடியாது; அவர் என்றும் எம்முடன் வாழ்வார்'' என்றார்.

# மகா சிவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஸ்ரீராமகிருஷ்ண சேவாச்சிரமத்தின் ஆதரவில் திங்கட்கிழமை மாலை ஆறு மணியளவில் சிவராத்திரி விழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் திதிப்பூசையும் நடைபெறவிருக்கின்றது. இத்தினத்தில் விசேட பூசை, பஜனைகளுடன் திரு. கே. துரைராசாவின் சொற்பொழிவும் இடம் பெறும். (கி)

0 0 0

(அரியாலை)

அரியாலை இந்து இளைஞர் மன்றம் மகாசிவராத்திரி விழாவை அரியாலை சித்தி விநாயகர் ஆலயத்தில் சிறப்பாக நடத்தவிருக்கின்றது.

வித்துவான் வி. கதிரவேலு தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் சிறப்புச் சொற்பொழிவுகள், இசை நிகழ்ச்சிகள் கதாப்பிரசங்கம் ஆகியன இடம்பெறவுள்ளன. (கி)

# கிரிக்கட்: ஸ்கந்தாவை பற்றிக்ஸ் வென்றது

(அரியாலை)

யாழ் சென்ற்பற்றிக்ஸ் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயகல்லூரிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கட் போட்டியில் சென்ற் பற்றிக்ஸ் கல்லூரி இனிங்ஸ்சாலும், 59 ஓட்டங்களாலும் வெற்றியீட்டியது.

சென்ற் பற்றிக்ஸ் கல்லூரி துடுப்பெடுத்தாடி 8 விக்கட்டுகளை இழந்து 231 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இக் கோஷ்டியைச் சேர்ந்த ரியூபுட்டஸ், செல்லப்பா, அரியராசா ஆகியோர் தலா 60, 52, 43 ஓட்டங்களைப் பெற்றனர். ஜெயக்குமார் 44 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுக்களை எடுத்தார்.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி தனது முதலாவது ஆட்டத்தில் எல்லா விக்கட்டுகளையும் இழந்து 104 ஓட்டங்களையும் இரண்டாம் ஆட்டத்தில் எல்லா விக்கட்டுகளையும் இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றது. இக் கோஷ்டியைச் சேர்ந்த என். சிறீதரன் 56 ஓட்டங்களை முதலாவது ஆட்டத்தில் பெற்றார். இவர்களை எதிர்த்துப் பந்துவீசிய நவநீதராசா 28ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுகளையும், மெலானிஸ் 23 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கட்டுகளையும் முதலாவது ஆட்டத்தில் பெற்றனர். இரண்டாவது ஆட்டத்தில் மெலானிஸ் 28 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கட்டுகளைக் கைப்பற்றினர்.

கிரிக்கட்மத்தியஸ்தர் சங்கத்தைச் சேர்ந்த திருவாளர்கள் ஆர் பிரேம்குமார், ஆர். செல்வராசா ஆகியோர் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர். (அ)


**வெலிங்டன்**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் — ஜெய்சித்ரா
**கல்யாணமாம் கல்யாணம்**

**லிடோ**
(யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
22.2.82 முதல்
**பூந்தளிர்**

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
19-2-82 முதல்
21-2-82 வரை
முத்துராமன்-நாகேஷ்-சுந்தரராஜன்
பாலையா-ராஜஸ்ரீ-சௌகார் ஜானகி
பாலசந்தரின் முழுநீள ஹாஸ்ய படம்
**பாமா விஜயம்**
தினசரி 4 காட்சிகள்
22-2-82 முதல்
நடிகர் திலகம் சிவாஜி-புன்னகை அரசி
கே. ஆர் விஜயா, ஸ்ரைல் நடிகன்
ரஜனிகாந்த்-சுமித்ரா-தேங்காய்
**ஜஸ்டிஸ் கோபிநாத்**
மகாசிவராத்திரியை முன்னிட்டு நள்ளிரவுக் காட்சியும் காண்பிக்கப்படும்.


# இன்றைய பலன்

மாசி மாதம் 8 ம் திகதி
சனிக்கிழமை
(20—2—82)

மேடம்: எண்ணம் போல் வாழ்வு மலரும், சமூகத்தில் மதிப்பு உயரும், வாகன சொந்தக்காரர்களுக்கு மதிப்புண்டு, நண்பர்கள் உதவுதற்கு முன் வருவார்கள், சாந்தகுணம் சிறப்பைத் தேடித்தரும்.

இடபம்: புத்திக்கூர்மையுடன் புதிய எண்ணங்கள் தலைதூக்கும், புத்திரர்களால் புகழும் கிடைக்கும், இறை நம்பிக்கையுடன் இல்லத்தில் இனிமை தவழும்.

மிதுனம்: கழுகுப்பார்வை உங்களை வட்டமிடும், எதிரிகள் காத்திருப்பர், ஆயுத பீடைக்கு இடம் அளிக்கலாம், எதிலும் அவதானம்வேண்டும்.

கடகம்: இதயத்தில் பூரிப்பு, இன்பத்தின் சாயலுடன் இல்லறமும் சிறக்கும், கரும்புபோல் இனிக்கும் காரியங்கள் உண்டு.

சிங்கம்: சிந்தனைகளின் தாக்குதல்கள் உங்களைச் சிந்திக்க வைக்கும், குழந்தை ஒன்றின் உடல் நலம் பாதிக்கப்படலாம், வைத்தியச் செலவுக்கும் இடமுண்டு, அவசர முடிவை தவிர்க்கவும்.

கன்னி: இரக்கசிந்தை மேலோங்கும், பிறருக்கு உதவுவதில் மகிழ்ச்சியடைவீர்கள், முன்னாள் ஆசிரியர் ஒருவரின் சிபார்சுக் கடிதம் நல்ல பலனை அளிக்க முடியும், பொதுவாக தரமான தினம்.

துலாம்: கடமையாற்றுமிடத்தில் மற்றவர்களின் மதிப்பைப் பெறுவீர்கள், சிலருக்கு வெளிநாடு செல்லும் சந்தர்ப்பமும் கிடைக்கலாம், கூட்டு வியாபாரம் சிறந்த பலனைத் தர முடியும்.

விருச்சிகம்: புதுமையான சம்பவங்கள் நடைபெறும், சிலருக்கு அதிர்ஷ்ட லாபங்களுக்கும் இடம் உண்டு. விருந்தினரின் வருகை உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

தனு: எதிர்பாராத செலவினங்களினால் பாதிக்கப்படுவீர்கள், கடன் வாங்கவும் நேரிடலாம், சமீபத்தில் நடந்து முடிந்த சம்பவம் ஒன்று மனதிற்கு வேதனையைத் தரலாம், தொழிலிலும் தொல்லை உண்டு.

மகரம்: விரக்தியிலே உருவாகும், வேண்டாத தொடர்புகளால் தொல்லைகள் தோன்றக்கூடும், உடல்நலம் சிறிது பாதிக்கப்படலாம். நன்கு சிந்தித்தபின் செயலாற்றுக.

கும்பம்: பேச்சுவன்மையால் பெரும் புகழ் சேரும், பெரியோர்களும் ஆசி கூறுவர், அரசியல்வாதிகள் அதிக செல்வாக்கைப் பெறுவர்.

மீனம்: எதிலும அவசரப் போக்கைக் கடைப்பிடிப்பீர்கள், தரக்குறைவான தகவல்கள் கிடைக்கக்கூடும், பெரியவர் ஒருவருடன் கருத்துவேற்றுமை தோன்றலாம்; அடக்கம் வேண்டும்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

# வரி விளம்பரம்

## பயிற்சி

வெல்டிங், வயறிங், செய்முறை, அறிமுறையுடன் (28—2—82)ஆரம்பம். .E.T. ஜலன்ட், 58, ஸ்ரான்லி ரோட், விகாரைக்கு முன்பாக, யாழ்ப்பாணம். 2287

## தேவை

தனிப்பட்டவருக்கு வாகனம் ஓட்ட, நாணயமான அனுபவம்மிக்க கார்ச்சாரதி தேவை. (வயது 50—55க்குமிடையில்) சாரதிப் பத்திரத்துடன் நேரில் வரவும். த. சோமசுந்தரம், 257, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 2316

கிளிநொச்சியிலுள்ள சீமெந்துப்பைப் தொழிற்சாலைக்கு வேலையாட்கள் தேவை. வயது: 18—30க்கும் இடையில். சீமெந்து வேலை செய்யக் கூடியவர்களாகவும், திடகாத்திரமானவர்களாகவும், தொழிற்சாலைக்கு சமீபத்தில் வசிப்பவர்களும் விரும்பத்தக்கது. திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். வேலைநாட்களில் நேரில் வரவும். சீமெந்துப்பைப் தொழிற்சாலை, 155ம் கட்டையடி, கண்டி வீதி, கிளிநொச்சி. 2311

## வகுப்பு

மோட்டார் மெக்கானிக், வயறிங், வெல்டிங் வகுப்புகள் ஆரம்பம் 20—2—82. J. E. C., 33, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 2310

வெளிக்கள மருந்தாளர் பரீட்சையும், மருந்துக்கலவையாளர்களின் தேர்ச்சிப் பரீட்சையும் (External Pharmacist Exam and Proficiency Test for Govt. Dispensers) பரீட்சைகளுக்கான வகுப்புக்கள் முதன்முதலாக 14.3.82தொடக்கம் Dr. S. ஞானபண்டிதனால் நடத்தப்படும். கொழும்பிலிருந்து வந்து விரிவுரைகளை நடத்துவார். குறிக்கப்பட்ட மாணவர்களே அனுமதிக்கப்படுவர். நேரிலோ, கடித மூலமோ தொடர்பு கொள்க. சு. பாலசுப்பிரமணியம், 574/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2314

## விற்பனைக்கு

நெல் குற்றும் கல்லர், அரைக்கும் இயந்திரங்கள், மோட்டரும் உபகரணங்களும் விற்பனைக்கு உண்டு. சிவயோகநாதன், நெல்லியடி, கரவெட்டி. 2318

நிதான விலையில் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சிறந்தரக கிரிக்கட் (Cricket) உதைபந்தாட்ட (Foot Ball) மற்றும் சிறந்தரக விளையாட்டு உபகரணங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளுங்கள்: 516 (பழைய இல: 278) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2321

யாழ்ப்பாணம் நல்லூர் செட்டித்தெருவில் வீடுகட்டுவதற்கு அமைப்பான 2½பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: த. ஸ்ரீபதி, சட்டத்தரணி, பழம் ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 2320

ஆங்கில அறிவும், ஆங்கில தட்டெழுத்தும் தெரிந்த, நல்லொழுக்கமுள்ள ஒருவர் தேவை. யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் இருப்பவரும் ஓய்வூதியம் பெறுபவர் விரும்பத்தக்கது. விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 2301 c/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 2301

## அறிவித்தல்

### மின்தடை

இலங்கை மின்சார சபையினரால் சில அத்தியாவசிய திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட இருப்பதால், 21 02.1982ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணியிலிருந்து மாலை 6.00 மணி வரையும் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற எல்லைக்குள் மின் விநியோகம் பெறும் பாவனையாளர்களுக்கு மின்சாரம் தடைப்படும் என்பது முன்கூட்டியே இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**சீ.வி.கே. சிவஞானம்,**
ஆணையாளர்,
யாழ் மாநகராட்சி மன்றம்;
மாநகராட்சிமன்ற
அலுவலகம்.
யாழ்ப்பாணம்.
17/02/1982. 2326

**இன்று மாலை 6 30 மணிக்கு**
**இலங்கை அவைக்காற்று கலைக்கழகம்**
அளிக்கும்

1. **முகமில்லாத மனிதர்கள்**
   நெறியாள்கை: க. பாலேந்திரா
2. **காமன்கூத்து**
   (மலையக மரபுவழி)

ரிக்கற்: நாளைய நடன இசை நிகழ்ச்சிகளுக்கும் சேர்த்து ரூபா 10/—, 5/— மட்டுமே

**வீரசிங்கம் மண்டபத்தில்**

## விளம்பரதாரர் கவனத்திற்கு!

மறுநாள் பத்திரிகையில் பிரசுரிப்பதற்குரிய உள்பக்க விளம்பரங்கள் தினசரி காலை 9 மணி முதல் நண்பகல் 12—00 மணி வரையும், வெளிப்பக்க விளம்பரங்கள் பிற்பகல் 7—00 மணி வரையும், மரண அறிவித்தல் விளம்பரங்கள் இரவு 9—30 மணி வரையும்

யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதி
303-ம் இலக்கத்திலுள்ள
'ஈழநாடு' காரியாலயத்தில்
ஏற்றுக்கொள்ளப்படும்.

போன்: 389 நிர்வாகி, 'ஈழநாடு'.

## WANTED

Chartered Accountant with 10 yea s experience in similar capacity for a Leading Construction Company in Jaffna to take full charge of Financial and Management Accounts Please apply befor 28/2/82 with all particulars including Salary requirements to Manoharan and Vettivel—Engineers and Contractors, 53, Kandy Road, Jaffna. 2291

## வெற்றுச் சாக்கு விற்பனை

பின்வரும் விபரப்படியான வெற்றுச் சாக்குகளை விற்பனை செய்வதற்கான முத்திரையிடப்பட்ட (சீல்) கேள்விப் பத்திரங்கள் நாவுட்டான் பகுதி ப. நோ. கூ. சங்கத்தால் கோரப்படுகின்றன.

[1] 80 படி அரிசிச்சாக்கு 119
[2] 50 ,, ,, 1723
[3] 112,, ,, 49
[4] 50 ,, சீனி சாக்கு 153
[5] 140,, பிறிமா சாக்கு 103
[6] நவதானியம் 32
[7] கழிவு சாக்கு 156
[8] பல இன கழிவு சாக்கு 35
[9] உப்பு பேக 11

விண்ணப்ப முடிவு திகதி: 27.02.1982.

மேலதிக விபரங்கட்கு சங்க தலைமைச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**பி. ஜே. இராஜசிங்கம்**
பொதுமுகாமையாளர்.
நாவுட்டான் பகுதி
ப.நோ.கூ. சங்கம்,
முருங்கன்.
தொலைபேசி: 18.
16 02.1982. 2324

## இறுதியாத்திரை..

(2ம் பக்கத் தொடர்ச்சி

ருக்கு விருப்பமில்லை. 'இதனால் மிகவும் பலவீனமுற்றிருந்தார். மேல் மாடியில் மூன்று நாட்கள் ஒரே அறையில் படுத்திருந்தார். சில சமயம் வாசித்துக்கொண்டிருப்பார், சிலசமயம் பிரார்த்தனை செய்துகொண்டிருப்பார், சில சமயம் செல்லம்மாவை அழைத்துப் பேசிக்கொண்டிருப்பார். மூத்த மகள் தங்கம்மா திருமணமாகி கணவன் வீட்டில் இருந்தார். இளைய மகள் சகுந்தலாவே பாரதியாரை இருந்து கவனித்து வந்தார்.

உயிர்பிரிவதற்குச் சிலமணி நேரத்துக்கு முன்னர் பாரதி மீண்டும் பழையபடி உயிர்பெற்ற பாரதியாராகக் காட்சியளித்தார். படுக்கையில் இருந்து எழுந்து கவனமதோய்த்த உடுப்புக்களை அணிந்து கொண்டார். கறுப்புக் கோட்டைப் போட்டுக்கொண்டார். தலைப்பாகையை கட்டிக்கொண்டார் படுக்கையில் மீண்டும் விழுந்துவிட்டார்.

கொஞ்சம் கஞ்சி கொடுப்பதற்காக சகுந்தலா அழைத்துச் சென்றபொழுது அவசரமாக வெளியில் போகும்படி கையசைத்தார். பிறகு செல்லம்மா சென்றார். அவரைக் கண்டதும் "நான் பிரார்த்தனை செய்துகொண்டிருக்கிறேன் — சற்று கழித்துவா செல்லம்" என்று கூறினார். கைகளைக் குவித்துக் கண்களை மூடிக்கொண்டார். செல்லம்மா திரும்பி படிகளில் இறங்குவதற்கு ஒரு அடி வைத்திருப்பார். ஆழமாக அவர் பெருமூச்சுவிடுவது கேட்டது. செல்லம்மா அவசரமாகத் திரும்பி அறைக்குள் வந்தார் பாரதியார். கரங்களைக் குவித்து கண்களை மூடியபடி உயிர்பிரிந்த நிலையில் படுக்கையில் கிடந்தார்.

வி[illegible] தலைக்குயிலின் குரல் ஓய்ந்தது ஆனால் அ[illegible] உணர்வுடன் அவர் பாத்த கவிதைகளில் [illegible] றென்றும் நமக்காக நி[illegible]கும். (முற்றும்)

## விளம்பரம்

பருத்தித்துறை
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வ/து), பருத்தித்துறை

### பதவி வெற்றிடங்கள்

1. கணக்கு லிகிதர் தரம் 1
2. கணக்கு லிகிதர் தரம் 11

மேற்குறிப்பிட்ட பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வதிவுத்தகைமை: குறைந்தளவு 2 வருடமாவது யாழ்ப்பாண மாவட்டத்திற்குள் வசிப்பவராய் இருத்தல் வேண்டும். (எமது சங்க எல்லைக்குள் வசிப்பவர்கட்கு முன்னுரிமை வழங்கப்படும்)

வயது: 18க்கும் 45க்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும். (கூட்டுறவுச் சேவையிலிருப்போருக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது,

**விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும்**
**கடைசித் திகதி: 1982-03-09-ந் திகதிக்கு**
முன்னர் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பப் பத்திரம், மற்றும் தேவையான தராதரங்கள், சம்பளம், தகைமைகள் பற்றிய விபரங்கள் யாவையும் பெறுவதற்காக கீழ்காணும் விலாசத்திற்கு எழுத்து மூலமோ அல்லது நேரடியாகவோ வந்து பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெற வேண்டின் முத்திரை ஒட்டப்பட்ட சொந்த முகவரியிடப்பட்ட தபால் உறை அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் பதிவுத்தபால் மூலம் "தலைவர், பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை" என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் எழுதப்படுதல் முக்கியமாகும்.

**தலைவர்,**
**பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம்,**
பருத்தித்துறை,
1982—02—18. (2323)

## கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை
உடுவில் உப அலுவலகம்
மருதனுமடம் சந்தைக் கடை இலக்கம் 1
தெரிவு செய்யும் உரிமைக்கான கேள்வி

மேற்படி கடை 1—3—82 முதல் வாடகைக்கு விடுவதற்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 5—3—82 ம் திகதி நண்பகல் 12—00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். இதற்கான கேள்விப் பத்திரங்கள் யாழ். அபிவிருத்திச்சபை உடுவில் உப அலுவலகத்தில் 3—3—82 பிற்பகல் 3—00 மணி வரை கேள்வி வைப்புப் பணமாக ரூ. 100/— யும் கேள்விப் பத்திரக் கிரயமாக ரூபா 25/—யும் செலுத்தும் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும்,

முன்னர் மருதனுமடச் சந்தைக் கடைகளுக்கு கேள்விகள் அழைக்கப்படும் பொழுது வைப்புப் பணம் செலுத்தியவர்கள் கேள்விப் பத்திரக் கிரயம் ரூபா 25/— மட்டும் செலுத்தி கேள்விப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபையின் தீர்மானத்தின்படி காலத்துக்குக் காலம் ஏற்படும் நிபந்தனைகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் அமைய கேள்விக்காரர் கட்டுப்படுதல வேண்டும்.

இக்கேள்விகளை ஏற்கவோ நிராகரிக்கவோ யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபைத் தலைவருக்குப் பூரண அதிகாரம் உண்டு.

இக்கடைக்கு நிர்ணயிக்கப்பட்ட மாதாந்த வாடகை ரூபா 110/— அத்துடன் ஒரே தடவையில் விற்பனை சய்பந்தமாக செலுத்தப்படவேண்டிய ஆகக்கூடுதலான கேள்வித் தொகையை யார் செலுத்துகின்றாரோ அவருக்கே இக்கடை வழங்கப்படும்.

இக்கடைக்கு ஒரே தடவையில் செலுத்தவேண்டிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை ரூபா 27,750/—க்குக் குறையக் கூடாது.

சித்திகரக் கேள்விக்காரர் தமது கேள்வியின் முழுத் தொகையையும் 15—3—82 அன்று முற்பகல் 10—00 மணிக்கு முன்னர் பணமாக செலுத்துவதுடன் வாடகைப் பிணையாக ரூபா 330/—யும் உப அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ள வேண்டும். ஒப்பந்தம் ஒன்றையும் செய்துகொள்ள வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் பதிவுத்தபால் மூலம் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்பட்டு செயலாளர், யாழ். அபிவிருத்திசபை, யாழ்ப்பாணம். அவர்களுக்கு மூலப் பிரதியை அனுப்பும் அதேவேளையில் இணைப்பிரதியை அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர், உடுவில் யாழ். அபிவிருத்திச்சபை உப அலுவலகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும்.

தேவைக்கேற்ப விலை மதிப்பீட்டாளரால் எடுக்கப்படும் மறு மதிப்பீட்டின் பிரகாரமே வாடகை அறவிடப்படும். கேள்விக்காரர் வாடகைக் கடையை உப வாடகைக்குக் கொடுக்கக்கூடாது. அபாயகரமானதும், அருவருக்கத்தக்கதுமான எந்தவித வியாபாரமும் இக்கடையில் நடாத்துவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

இது சம்பந்தமான மேலதிக விபரங்களை யாழ். அபிவிருத்திச்சபை உடுவில் உப அலுவலகத்திலும் தலைமை அலுவலகத்திலும் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ் அபிவிருத்திச்சபை, தலைவர்
செயலகம், யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை.
யாழ்ப்பாணம்.
18 02—1982

## இந்தோனேஷியாவில் ஊழலை ஒழிக்க அரசு அதிகாரிகள் அனைவரையும்பதவி க்கவேண்டுமாம்

ஜகார்த்தா, பெப். 18 ''இந்தோனேஷியாவில் ஊழல்களை முற்முக ஒழிக்க வேண்டுமானல் அங்குள்ள அரசாங்க அதிகாரிகள் அனைவரையும் பதவி நீக்கம் செய்யவேண்டும்.''

இந்தோனேசியா தகவல் பிரிவின் தலைவர் திரு. யோகா ஷொகாமா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ளதாவது: 'அரசாங்கப்பணம், அதிகாரிகளால் இந்தோனேஷியாவில் மோசடி செய்யப்படுகிறது. ஊழல் நடவடிக்கைகளில் தனிநபர்களே ஈடுபட்டுள்ளார்கள். சுகர்னோவின் ஆட்சிக்காலத்தில் ஸ்தாபனங்களும் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டன' என்றுர். (வெ)

## ரூ.4லட்சம்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சென்றிருக்கலாம் என்று யூகித்த டாக்டர் பின்னர் ஏதோ ஒரு வகையாக அறையிலிருந்து தனது துணைவியாருடன் வெளியேறி, அவசரம் அவசரமாகத் தங்களது நகைகள் வைக்கப்பட்டிருந்த இடங்களைப் பார்த்தனராம்.

### நகைகள் கொள்ளை

தாலிக்கொடி, சங்கிலிகள், வளையல்கள், தோடுகள் என்று நான்கு லட்சத்து ஐயாயிரம் ரூபா பெறுமதியான நகைகளும் இரண்டாயிரம் ரூபா ரொக்கப்பணமும் களவாடப்பட்டது பின்னர் தெரியவந்தது.

### அதிகாலையில் பொலிசார்

அதிர்ச்சிக்குள்ளான டாக்டர் அயலவர்களின் உதவியுடன் பருத்தித்துறை பொலிஸ் நிலையம் சென்று நடந்த கொள்ளைச் சம்பவம் பற்றி முறையிட்டனர்.

இதனைத் தொடர்ந்து பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் திரு. எஸ். திருச்சிற்றம்பலம் தலைமையில் சார்ஜன்ட் ஜெயவர்த்தன, கான்ஸ்டபிள்கள் ஜி. அருந்தவராஜா, ஆர். ரத்தினயக்கா, சந்திரசேன ஆகியோர் அடங்கிய கோஷ்டி ஸ்தலத்துக்கு உடனடியாகச் சென்று விசாரணை நடத்தியது.

உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் திரு. எஸ். நவரத்தினராஜா ஸ்தலத்துக்கு நேற்றுக் காலை சென்று விசாரணைகளைக் கவனித்தார்.

### பொலிஸ் நாய்

இக்கொள்ளையில் துப்புத் துலக்க பொலிஸ் நாய் வரவழைக்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.


## ஹோம் பிறைன்ஸ் லிமிட்டெட்

## உல்லாச பஸ் சேவை

கண்ணியமான, பாதுகாப்பான பஸ்சேவை

யாழ் - கொழும்பு: செவ்வாய், வியாழன், ஞாயிறு

கொழும்பு - யாழ்: திங்கள், புதன், வெள்ளி.

யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:

(1) ஹோம் பிறைன்ஸ் லிமிட்.
இல: 82, கன்னதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 8310

(2) யாழ். ஐக்கிய வியாபார சங்கம்
420 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன் — 370, — 438, — 537.

(3) யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 7596.

(4) குயிக் ட்ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்
சரஸ்வதி கார்டின்ஸ், சேர்ச்லேன், சாவகச்சேரி.
தொலைபேசி இல: 273, சாவகச்சேரி

கொழும்பில் டிக்கட் பெறும் இடங்கள்

ஹோம் பிறைன்ஸ் லிமிட்டெட்
463, காலிவீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190.

ரவிந்திரா ஸ்டோர்ஸ்
285, காலி வீதி, வெள்ளவத்தை.

லங்கா பம்பே சுவீட் ஹவுஸ்,
இல. 105, ஒல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.
தொலைபேசி இல. 22830

ஸ்ரீ மணிமலர் ஸ்டோர்ஸ்
இல. 157/2, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு-11.
தொலைபேசி இல. 23277.

நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
127, காலி வீதி, பம்பலப்பிட்டி.
தொலைபேசி இல: 88866.

கட்டணம ரூபா 65-00


## இன்று மேடையேறும் "முகமில்லாத மனிதர்கள்"

''இப்ப உனக்கு எத்தனை வயது?''

இது கேள்வி.

''ஒரு நூறு இரு நூறு கூட இருக்கலாம். ஆனல் சர்டிபிக் கேட்படி முப்பத்தி அஞ்சு''

'முகமில்லாத மனிதர்கள்' நாடகத்தில் வரும் இந்திரஜித் என்ற கதாபாத்திரம் இப்படித்தான் பதில் சொல்கிறது.

கிட்டத்தட்ட இரு நூறு ஆண்டுகால சரித்திரம் கொண்ட படித்த மத்திய வர்க்கத்தின் பிரதிநிதியான இந்தரஜித் வெகு அற்புதமாக இந்த நாடகத்திலே சித்தரிக்கப்பட்டிருக்கிறுன்.

வங்காள நாடகாசிரியர் பாதல் சக்காரின் 'ஏபங் இந்திரஜித்' என்ற நாடகமே ''முகமில்லாத மனிதர்கள்'' என்ற வடிவில் மேடையேறுகிறது.

''ஜுபிட்டர் கடவுள் சாபத்தினல் சிசிபஸ் கல்லை உருட்டிக் கொண்டு மலைச்சிகரத்துக்குப் போவான். சிகரத்துக்குப் போனவுடனேயே கல்உருண்டு அடிவாரத்துக்குப் போயிடும். அவன் மேலே உருட்ட உருட்ட அது கீழே போய்க் கொண்டே இருக்கும்''

என்கிறுன் இந்திரஜித்.

சபிக்கப்பட்ட சிசுபஸ் மாதிரி நாங்கள் வாழ்க்கையில் குறிக்கோள் எதுவுமின்றித் தவிக்கும் அநாதரவான நிலையினை இந்நாடகத்தின் கதாபாத்திரங்களாக வரும் அமல், விமல், கமல், இந்திரஜித், மானஸி ஆகியோர் சித்தரிச்கின்றனர்.

இருப்பியல்வாத (EXISTENTIALISM) நோக்கில் வாழ்க்கையினைத் தரிசிக்க முனையும் ''முகமில்லாத மனிதர்கள்'' நாடகம் வாழ்க்கை நிகழ்வுகளைக் கூர்மையாக அவதானிக்கும் ரசிகனுக்கு நல்விருந்தாக அமையும் எனலாம்,

''முகமில்லாத மனிதர்கள்'' நவீன நகரவாழ்வின் முகமற்ற மனிதர்களையும் அர்த்தமில்லாத உரையாடல்களையும் கொச்சையான நம்பிக்கைகளையும் பிரக்ஞை கொண்ட இளைஞன் பார்வையிலும், நாடகத்தன்மையில்லாத மனிதர்களைக்கொண்டு நாடகம் படைக்க முற்படும் எழுத்தாளன் பார்வையிலும் சித்தரிக்கிறது.

கோ. ராஜாராமின் தமிழ் வடிவத்திலிருந்தும் கிரீஷ் கர்னுடின் ஆங்கில வடிவத்திலிருந்தும் 'முகமில்லாத மனிதர்கள்' தழுவித் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை அவைக்காற்றுகலை கழகத்தின் மூன்றுவது ஆண்டு நிறைவையொட்டி இன்று மாலை 6.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இந்நாடகம் மேடையேறவிருக்கிறது.

க. பாலேந்திரா நெறிப்படுத்தும் இந்நாடகத்தில் எம். சத்தியமூர்த்தி, கு. கானகலாதரன், க. இ. பாஸ்கரன் ச கௌரிசங்கர், அ. மகேந்திரன், ஆனந்தராணி ராஜரட்ணம் ஆகியோர் முக்கிய பாத்திரமேற்று நடிக்கின்றனர்,

## இதுவும் நடக்கிறது

யாழ். மாவட்டத்தில் நூற்றுக்கு தொண்ணூற்று ஒன்பது சத வீத மின் பாவனையாளர்களை 'கிலி' பிடிக்கச் செய்திருப்பது என்ன தெரியுமா?

சாட்சாத், மின்சாரக் கட்டணங்கள்தான்!

முன்னர் ஒவ்வொரு மாதமும் தவருமல் வீடுதேடிவரும் மின்கட்டணத்தையே 'தவணை' முறையில் செலுத்திவந்த பலருக்கு இப்பொழுது பல மாத இடைவெளியின் பின்னர் கிடைக்கும் மின்கட்டணங்கள் 'பைத்தியத்தை' உண்டாக்கியிருக்கின்றன!

பல்கலைக்கழக விரிவுரையாளராகக் கடமையாற்றும் கலாநிதி ஒருவருக்கு அண்மையில் கிடைத்த மின்கட்டணம் உலக அதிசயத்தை ஏற்படுத்தியுள்ளது!

அவர் இதற்கு முன்னர் மாதம்தோறும் செலுத்திவந்த மின்கட்டணம் பதினெட்டு ரூபா. இப்பொழுது அவருக்குக் கிடைத்திருக்கும் மின்கடடணம்...ஆயிரம் ரூபா!

ஊடுருவி

## சாட்சியங்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசதரப்பு சட்டத்தரணியாக எஸ். ஞானதாசன் ஆஜரானுர்.

எதிரிதரப்பு சட்டத்தரணியாக ஐயாத்துரை சிவநாதன், சட்டத்தரணி ஆர். வசந்தசேனனின் அனுசரணையுடன் ஆஜரானுர்.

நேற்று நடைபெற்ற இவ் வழக்கு விசாரணையின்போது இறந்தவரை பிரேத பரிசோதனை செய்த டாக்டர் குணநாயகி கந்தசாமி நேற்று காலை சாட்சியமளித்தார்.

நாராயணசாமி ராசு, செல்லத்துரை பாஸ்கரசிவாஜி ஆகியோரும் சாட்சியமளித்தனர். (மா)

## தடுப்புக்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்பட்டது.

இவ்விசாரணை உயர் நீதிமன்ற நீதியரசர்களான திரு. வீரரத்ன, திரு. விக்டர் பெரேரா, திரு! விமலரத்ன ஆகியோர்முன்னிலையில் நடைபெற்றது!

குலசேகரம் ராஜசிங்கம், எஸ். அருணகிரிநாதன், வி. சிவச்செல்வம் ஆகியோரை தடுப்புக்காவலில் வைப்பது சட்டப்படி செல்லுபடியாகும் என்றும் இவ் உயர்நீதிமன்ற நீதியரசர்கள்தீர்ப்பளித்தனர் (வெ)

## கிரிக்கெட்...

(1ம் பக்கந் ெரிாடர்ச்சி)

பனத்தின் வட பிராந்திய எலக்ரோனிக் பொறியியல் அதிகாரி திரு. எஸ். ஞானசிங்கம், தொலைக்காட்சி பொறியியலாளர் திரு பிரட்றிக் கோமஸின் ஒத்துழைப்புடன் செய்துள்ளார்.

இரவு நேரத்தில் 'ரூபவாஹினி'யில் சிங்களத்தில் மட்டுமே ஏனையபகுதிகளில் இடம்பெற்று வந்த கிரிக்கெட் வர்ணனை, மேற்படி அதிகாரிகளின் நடவடிக்கைகளைத் தொடர்ந்து, தமிழ் வர்ணனை ஒலிப்பதிவு செய்யப்பட்டு, பின்னர் மண்டைதீவு ஒலிபரப்பு நிலையம்மூலம் வடபகுதி தொலைக்காட்சி ரசிகர்களுக்காக ஒலிபரப்பப்படுகிறது.

## மரண அறிவித்தல்

### தம்பையா செல்வரத்தினம்

(இந்தியன் ஓவசீஸ் வங்கி)

கோண்டாவிலைச்சேர்ந்த தம்பையா செல்வரத்தினம் (இந்தியன் ஓவசீஸ்வங்கி) காலமானுர். இவர் சிவமணியின்அன்புக் கணவரும், தெய்வமாலா, உரும்பராய் இந்துக் கல்லூரி, ரவிமாலா வேம்படி மகளிர்கல்லூரி, செல்வக்குமரன், உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலை, ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற சின்னக்குட்டி தம்பிப்பிள்ளை அவர்களின் மருமகனுமாவார். அன்னுரின் பூதவுடல் இன்று சனிக்கிழமை (20—2—82) பிற்பகல் 2 மணியளவில், உரும்பராய் வடக்கு எருளன் மயானத்தில் தகனம் செய்யப்படும். உற்றூர், உறவினர், நண்பாகள் இவ் வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

திருமதி செல்வரத்தினம்,
உரும்பராய் வடக்கு.

2 38

## மரண அறிவித்தல்

### பி. வின்சென்ற்

(இளைப்பாறிய மாவட்ட பொதுசன சுகாதார மேற்பார்வையாளர்)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பி. வின்சென்ற் (S.P.H.I D,) காலமாகிவிட்டார். இவர் திரேசா அவர்களின் அன்புக் கணவரும், சாந்தி, அ. ஜே. வின்சென்ற் (நீர்ப்பாசன திணைக்களம், இங்கினிமிட்டியா), அருந்ததி ஆகியோரின் அன்புத் தப்பனுரும், இருதயநாதன் நீர்ப்பாசன திணைக்களம், வவுனியா), லிண்டா, குலேந்திரா (சவூதி அரேபியா) ஆகியோரின் அன்பு மாமனுரும், றேசான், நோயல், டிலக்சன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னுரது பூதவுடல் நல்லடக்கத்திற்காக பிரதான வீதியிலுள்ள 141/1 இலக்க இல்லத்திலிருந்து புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு இன்று (20—2—82) பி. ப. 4—00 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

2334


## நஷனல்-சொனி ரெலிவிஷன்களுக்கு

எஸ். சின்னத்துரை அன் 'பிறதர்ஸ்

யாழ்ப்பாணம். போன்: 284


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "[illegible]" லிமிட்டெட்டுக்காகயாழ்ப்பாணம் காங்கேசன் துறை வீதி, 603 ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் பெப்ரவரி மீ 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as NewsPaper. The General P.O..Sri Lanka Regd. Q.B.100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126.